475

மு.கருணாநி

முரசு 1 | சென்னை | 11—2—55 | வெள்ளி | ஒலி 46

"பட்டம் - எனக்கில்லையா?"



'மலையே வாழி!' (மு.க.) 6-ம் பக்கம்.

Best copy available

வெளியே சொன்னால் வெட்கம்!

[சுழல் விளக்கு]

தீவிர வாதம் பேசுகிறவர்களெல்லாம் துறவியாகவே இருக்கிறார்கள், அல்லது நாடு அவர்களை துறவியாக்கிவிடுகிறதே, ஏன்? என்ற சந்தேகம் எனக்கு நெடுநாட்களாக இருந்து வருகிறது. தீவிர வாதத்திற்கும் துறவுக்கும் என்ன தொடர்பென்றே எனக்குப் புரியவில்லை. தீவிர வாதம் பேசிய ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆண்டவன் (!) தூதர் ஆச்சாரியார், முத்துராமலிங்கத் தேவர், ஆஸ்திகப் 'பிரகஸ்பதி'களான ஆதீனங்கள் இவர்களெல்லாம் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான், பிடித்த முயலுக்கு கால் மூன்று என்று பிடிவாதம் பேசி முடிவிலே மூலையில் உட்கார வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளான ஆசாமிகள் இவர்கள்.

• ஒன்று, அரசியலில் இருக்கவேண்டும், அல்லது ஆஸ்தீகக் காவலனாக இருக்கவேண்டும்; சாந்தி! சாந்தி! என்று புலம்பிக்கொண்டே சைனாவின் சடபுடா வெடியையும் புகழ்ந்துகொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அரசியலில் செல்லாக் காசுகளான இந்தப் பேர்வழிகள் ஆஸ்தீகம் பேசத் தலைப்பட்டுவிட்டார்களாம்! அவர்களெல்லாம் பகுத்தறிவு இயக்கத்தை அழிக்க ஒரு புது 'சக்ராயுதத்தை' பிரயோகிக்கிறார்களாம்! 'கடவுளைத் திட்டுகிறார்களே இந்த நாஸ்தீகர்கள் இவர்களால் ஒரு கோழி முட்டையைச் செய்யமுடியுமா? அது ஆண்டவன் சக்தி. இவர்களெல்லாம் கையாலாகாதவர்கள்! ஆகவே ஆஸ்தீகப் பெருமக்களே அந்த சு.ம.க்கள் பேச்சை நம்பாதீர்கள்' என்று ஊருக்கு ஊர் பேசுகிறார்களாம். தெற்கு வட்டார சிவநேசச் செல்வர்களுக்கு இவ்வளவு பொருக்குமா? உடனே உச்சி குளிர்ந்துவிடும்! கொஞ்சம்கூட சிந்திப்பதே கிடையாது. 'உபன்யாசகர் முட்டையைப் பற்றி பிரமாதமாகப் பேசுகிறாரே, அந்த முட்டையை மனிதனால் செய்யமுடியாது என்று சவால் விடுகிறாரே, ஆனால் முட்டையைக் காட்டிலும் சக்திவாய்ந்த விஞ்ஞான ரீதியான உணவுப் பொருள்களை மனிதன்தானே செய்கிறான். பெரும் பெரும் வியாதிகளையெல்லாம் தீர்த்து விடக் கூடிய 'பென்சிலின்' மருந்தை கண்டுபிடித்தது மனிதன்தானே. அப்படி இருக்கும் போது இந்த முட்டை ஏன் மனிதன் செய்துகொண்டிருக்க வேண்டும். ஒரு நாள் முழுதும் ஒரு முட்டையைச் செய்து அதை இரண்டணாவுக்கு விற்றால் என்னாகும் தொழில் வளர்ச்சி? நாணயச் செலாவணி எவ்வளவு தடைப்படும்?' என்று எந்த பக்திமானும் யோசிப்பதில்லை. இவ்வளவு சிந்திக்க அந்த சீமான்களுக்கு நேரம் தான் இல்லையென்றாலும் "ஒன்றே குலம் — ஒருவனே தேவன்" என்பதற்கும் கோழி முட்டைக்கும் என்ன சம்பந்தம் என்றாவது சிந்திக்க வேண்டாமா? அந்த ஆஸ்தீகக் குழுவினரின் வாதப்படி 'முட்டை' மனிதனுக்குமேலான ஒரு சக்தியின் படைப்பு என்று வைத்துக் கொண்டாலும், ''அந்தசக்திக்கு மனைவி மக்களை ஏன் படைக்கிறாய்? வைப்பாட்டி ஏன்?, என்று தானே அறிவியக்கம் கேட்கிறது. கோழி முட்டையைப்படைத்த சக்திக்கு குடும்பம் ஏன் ஆஸ்தீகரே என்று ஒருவரும் கேட்கவில்லையே! ஏன்? தட்டிக் கேட்க ஆளில்லாமல் தான் அந்த முருக பக்தர்கள் செட்டி நாட்டில் சக்கைப் போடுபோடுகிறார்கள்.

★

''எண்ணம் ஒருமலர், மொழி அதன் மொட்டு, செயல் அதனுடைய கனி'' என்று ஒரு வெளிநாட்டுக்காரன் எப்போதோ சொல்லிவிட்டு மண்டையைப் போட்டு விட்டான், காங்கிரசின் இன்றைய 'சோஷலிச சோதனை'யை நினைக்கும்போது ஆரம்பத்திலே சொல்லியுள்ள அந்த வெளிநாட்டுப் பழமொழி தான் நம் நெஞ்சில் குதிக்கிறது கும்மாளம் போடுகிறது. காரணம் காங்கிரசின் சோஷலிசத்தில் மலரே இல்லை; பிறகு எப்படி மொட்டையும், கனியையும் காணமுடியும்? சோஷலிசம் நாட்டிலே மலர வேண்டும் என்ற எண்ணமே பண்டிதருக்கு இல்லை – இல்லாவிட்டால்பணமுதலைகளைக்கொண்டு ஒரு 'ஆவடியை' நடத்த ஒப்புவரா பண்டிதர்! கைதேர்ந்த சமயற்காரனால் கூட கார மிளகாயையும், கோடைப் புளியையும் கொண்டு 'குலோப்ஜான்' செய்ய முடியாது என்பது பண்டிதர் அறியாததா என்ன? சோஷலிசம் எங்கே, கொயாங்கா எங்கே? சோஷலிசம் எங்கே வடபாதி மங்கலம் எங்கே? இவர்களெல்லா 'ஆவடி'த்தூண்களாயிற்றே எப்படி நமது பண்டிதரின் சோஷலிசக் கனவு பலிக்கும்? அடுத்து அந்த வெளி நாட்டுக்காரன், 'மொழி அதன் மொட்டு' என்றான், இங்கே 'மொழி'க்கே தகராறு! சோஷலிச சிற்பிகளுக்கே பெருங் குழப்பம்! சோஷலிசம், கம்யூனிசம், சமதர்மம், பொதுவுடைமை இதில் எது, என்ன தத்துவத்தை உள்ளடக்கியது என்பதே இன்னும் அவர்களுக்கே புரியவில்லை. இந்த 'அழகி'ல் சோஷலிசம் எப்படி மலரும்? மொட்டை எப்படிக் காண்பது கனியை எவ்வாறு அடைய முடியும்? இதில் இன்னொரு வேடிக்கை! சோஷலிசத்தைப் பற்றி எல்லோரும் கூவினார்கள்! 'காற்றினிலே வரும் கீதம்' என்றுநேருவின் 'பிரசங்கத்தை' ரசித்தார்கள், ஆனால் அந்த சோஷலிசத்தோடு இரண்டறக் கலந்து நிற்கும் பொருளாதாரப் பிரச்சினை இருக்கிறதே–அந்தப் பிரச்சினையின் பிடரியின் அமர்ந்திருக்கும் சிந்தாமணி தேஷ்முக் இதுபற்றி எங்கும் தன்னுடைய கருத்தை வெளியிட வேயில்லை — இதில் என்ன சூது இருக்கிறதோ தெரியவில்லை. வெள்ளைக்காரனோடு உழன்று கொண்டிருந்த தேஷ்முக் மௌனம் சாதிக்கிறாரென்றால் அதில் அர்த்தமில்லாமலா போகும்?

★

''நீதியும் நிர்வாகமும் பிரித்திருப்பது பெரும் தொல்லையாக இருக்கிறதே' என்று உள்நாட்டுத் தலைவர்கள் வாயிலேயும் வயிற்றிலேயும் அடித்துக் கொள்ளுகிறார்கள். மடாதிபதிக்கு பிரதம மந்திரி வரவேற்பு நடத்திக் கொண்டும், குடியரசுத் தலைவர் பார்ப்பனரின் பாதங்களைக் கழுவிக் கொண்டுமிருந்தால் நீதியும் நிர்வாகமும் பிரிந்திருக்க முடியாதுதான். காரியமாற்றும் சட்ட மன்றங்களின் விஷயத்தில் காவியுடைக்காரன் தலையிட்டதினால் எவ்வளவு விபரீதங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை எத்தனை வரலாற்று நிகழ்ச்சிகள் உறுத்திக் கொண்டிருந்தாலும் இந்த 'பாரதமணிகள்' கேட்டால் தானே! இப்போது பாருங்கள், முக்கியமான—இன்றியமையாத அரசாங்கப் பொறுப்பிலே உள்ள அதிகாரி ஒருவர் மதசார்புள்ள ஒரு விழாவில் கலந்து கொண்டிருக்கிறார்—பத்திரிகைகளில் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் எழுதுகிறார்கள். இந்த நல்லவர்களின் ஆட்சியில் 'ஆளுக்கொரு பேச்சு, ஜாதிக்கொரு நீதி' என்றாகி விட்டது.

முன்பொரு முறை நடிகவேள் ராதாவின் 'ரத்தக் கண்ணீர்' நாடகத்திற்கு ஒரு பிரபல நீதிபதி தலைமை தாங்கினார் என்பதற்காக சர்க்கார் ஒரு ரகசிய உத்தரவைப் பிறப்பித்தார்கள். சர்க்காரின் எதிர்க்கட்சி சார்புள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக் கூடாது என்பதுதான் அந்த ரகசிய உத்தரவு. நல்ல நாடகத்திற்கு-நாட்டோரின் பேராதரவிற்கு இலக்கான ஒரு கலைநிகழ்ச்சிக்கு சர்க்கார் அதிகாரி தலைமை தாங்கக் கூடாதாம்–ஆனால் ஒன்றுக்கும் உதவாத நிகழ்ச்சியில் — அதாவது திருப்பனந்தாள் காசிமடத்தாரின் பொற்றாமரையை செசன்சு நீதிபதி மிதக்க விடலாமாம்!

இன்று பொற்றாமரையை மிதக்க விட்ட நீதிபதி நாளை 'ராமதாசை'ப் போல் தெய்வ சேவைக்காக யாராவது திருடினாலும் அது திருட்டாகாது என்று தீர்ப்புக் கூறினால்கூட அதில் ஆச்சரியமில்லாமல் அல்லவா போய்விடும். இதைக் கேட்க நாதியில்லையே இந்த நாட்டில்! இதற்கொரு ரகசிய அறிக்கையைக் காணவில்லையே! பொற்றாமரை! புரட்சிகொண்டநாடகம்! இதில் எது நாட்டுக்குத் தேவை!

★

'நரி வலம் போனாலென்ன, இடம் போனாலென்ன, மேலே விழுந்து கடிக்காமல் போனால்உத்தமம்'' என்று ஒரு பழமொழி உண்டு. 'அடையாற்று அம்மா' ருக்மணி அருண்டேல் இந்த முதுமொழியை நமதுநினைவுக்குக்கொண்டு வந்திருக்கிறார். திருமலையில் இந்துக்கள் அல்லாதார் நுழையக் கூடாது என்று ஒரு உத்தரவை ஆந்திரஅரசாங்கம் போட்டிருந்தது. அந்த உத்திரவை ருக்மணி அருண்டேல் உடைத்தெறிந்துவிட்டாராம். இதையொரு தித்திப்பான செய்தியென்று 'தினமணி' வெளியிட்டிருக்கிறது. திருமலைமற்றவர்களுக்கு இடம் தரவில்லையென்றால் இஸ்லாமியரும், கிறிஸ்துவரும் வாழ்விழந்துவிடப்போவதில்லை அதற்காக அவர்களும் 'திருமலை தெரிசனம்' கிடைக்காதா என்றும் தவம்கிடக்கவில்லை.

அருண்டேல் அந்தத்திருமலையைப் பார்த்துவிடடு அதை ஒரு யாத்ரீகர் ஸ்தலமாக்குவதற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துவிட்டாராம். பொதுமக்களின் பணத்தை உருப்படியான வழியில் செலவாக்க வழிவகை சொல்லாவிட்டாலும் வீண் விரயமாக்காமலாவது இருக்கக் கூடாதா! திருமலை யாத்ரீகர் ஸ்தலமானால் யாருக்கு லாபம்? தினம் தினம் வேதனையான செய்திகள் காதுகளுக்கு புதிது புதிதாக வந்துகொண்டிருக்கும் போது வேள்விக் கூடங்கள் தானா அவசியம்? பூந்தமல்லி குருடர் பள்ளி ஆசிரியர் சென்ற வாரம் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்; சென்னை மாநிலத்தில் மட்டும் ஒருலட்சத்து அறுபதினாயிரம் குருடர்கள் இருக்கிறார்களென்று! அதுபற்றி அம்மையார் ஒன்று சொல்லவில்லை! திருமலை தரிசனத்தை - தீர்க்க முடியாத—பார்மோசா தகராறைத்தீர்த்துவிட்டதைப்போல பேசுகிறார்கள்! அம்மாவை அரங்கேற்றிய அந்த கலாக்ஷேத்திரம் வாழட்டும்!!

★

தலையங்கம்

சென்னை 11—2—55 வெள்ளி

தெலுங்குச் சீமை தேர்தல்!

இந்திய உபகண்டமெங்கும் தனியாட்சிக் கோரிக்கைகளும், மொழிவழி அரசுக் கொள்கைகளும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நேரமிது! அயர்லாந்தை இங்கிலாந்திலிருந்து பிரித்துவைக்கும் சரித்திர ஏடு எப்படிப்பட்டது என்று இங்குள்ளோர் ஆராயத் துவங்கிவிட்டார்கள். அந்த இரு நாடுகளையும் தனித் தனியாகத் துண்டாடிய பூகோளக் கோடு எத்தன்மையது என்பது பற்றிய விவாதங்கள் இங்குள்ள பட்டிமண்டபங்களிலே ஒலிக்கத் துவங்கிவிட்டன. ஓடு வெடித்து வெளிக்கிளம்பும் பறவைக் குஞ்சுபோல – பல ஆண்டுகளுக்குப் பிறகு 'ஏக இந்தியா' எனும் மூடி கிழித்து, விடுதலைக் கதிரோன் புத்தொளி புரப்புகிறான். நிர்வாக வசதிக்காக வெள்ளையன் செய்துவைத்த ஏற்பாடு சவக்குழி நோக்கி தளர் நடைபோட்டபடி இருக்கிறது—எங்கு பார்த்தாலும் உரிமை முழக்கம்; பிளவுபட்டிருந்த பிரிவினை சக்திகள் அனைத்தும் ஒரு நிலையான முடிவு நோக்கி ஒன்று சேருகின்றன!

மத்ய சர்க்காரும், மாகாண சர்க்காரும் ஒத்துழைப்பதற்கு வாய்ப்பின்றி வாடுகின்றனர்!

இந்த நிலையில், ஆந்திரமாகாணம் வேண்டுமென்று கேட்டார்கள்; பெற்றுவிட்டார்கள்! இப்போது கர்நாடகம் கேட்கிறார்கள்.

பீகாரின் பகுதிகளுக்கு வங்காளம் உரிமை பாராட்டுகிறது; பம்பாயைத் துண்டுபோட்டு, மகராஷ்டிரமாக்கும் முயற்சி வேறு நடைபெறுகிறது!

இந்த நிகழ்ச்சிகளை குறுகிய மனப்பான்மை என்று இகழ்வோர், மாகாணப்பித்து என நிந்திப்போர் நிச்சயம் குதிரையைக் கோவேறு கழுதையென்று சொல்லும் குருட்டுமதியினராகத் தானிருக்க வேண்டும்!

பாரதமாதா புதுப்புது மாகாணங்களாக மொழி அடிப்படையில் கூறுபோடப்படும் இந்த நேரத்திலேதான் நாம், "திராவிட நாடு திராவிடருக்கே!" என்று முழக்கமிடுகிறோம்; போர்க்குரல் கொடுக்கிறோம்!

தெக்கணத்திலே கேட்கும் திராவிடநாடு கோரிக்கைக்கும்—ஏனைய பகுதிகளிலே உள்ள மொழிவழி மாகாணக் கிளர்ச்சிகளுக்கும் மகத்தான வேறுபாடு உண்டு!

கன்னித் தமிழும், கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும் சேர்ந்த திராவிடநாடு ஒரு நாலு கல் மூக்குத்தி!— திராவிட இனமென்னும் கொடியிலே காய்த்துத் தொங்கும் திராட்சைக் கொத்து!—என்பதை நாம் பன்முறை தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அந்த நாலு கல் மூக்குத்தியிலே—தித்திக்கும் திராட்சைக் குலையிலே—'நறுக்கு வேலை' நடத்தப் பார்க்கிறது பண்டிதரின் அரசாங்கம்! ஆந்திரத்தைப் பிரித்தவர்கள், அவர்களிடம் தமிழருக்கே சொந்தமான திருப்பதியையும், திருத்தணியையும் தந்து, தமிழரின் ஆத்திரத்தை தெலுங்கர் பக்கம் திருப்ப முயல்கிறார்கள். "அயலவர்கள்—அவர்கள்! உங்கள் உடைமையை ஆக்ரமித்துக்கொண்ட அவர்களோடா கூட்டாட்சி வைத்துக்கொள்வது?"—என்ற தவறான மனப்பான்மை தமிழகத்து மாந்தரிடையே தோன்றவேண்டுமென்பதற்காக, டெல்லி ஏகாதிபத்யம் செய்துவைத்திருக்கும் சூதுத் திட்டம்தான் அது!

இருந்தபோதுங்கூட, திராவிடநாடு என்னும் பெரிய அணியில் நாளை நாம் ஒன்று சேருவதற்குமுன், மாகாண அமைப்புகள் என்னும் சிறிய அணிகளை இன்று செப்பனிட்டுக் கொள்ளவேண்டாமா? அந்த எண்ணத்தின் விளைவாகத்தான் திருத்தணி கிளர்ச்சியிலே தி.மு.க. முக்கியபங்கேற்றது. அன்று தண்டவாளத்திலே தலைவைத்துப் படுத்து, மத்திய சர்க்காரின் பொருளற்ற போக்கினைக் கண்டித்து, வெஞ்சிறைப் புகுந்த வீரர்களில் பலரும் தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள்தான்!

அந்தச் செந்தமிழ் வழங்கும் சிற்றூர்களில்தான், அண்மையில் பொதுத்தேர்தல் வர இருக்கிறது. தமிழரின் நியாயமான கோரிக்கையை—அந்தப் பகுதிகளிடையே தமிழருக்குள்ள பாத்யதையை—வடக்கத்திய மமதையாளருக்கு எடுத்துணர்த்த இந்தத் தேர்தல் ஒரு பொன்னான தருணம்! இதைத் தக்க முறையிலே பயன்படுத்திக் கொள்ள வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு நான்கு தொகுதிகளிலே அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறதாம். தமிழ்ப் பகுதிகளாம் இந்த நான்கு தொகுதிகளிலும் தமிழர்களே தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்த நிலம் ஆந்திரருக்குத்தான் சொந்தம் என்கிற போலி மனப்பான்மை பொடிப் பொடியாகிவிடும்; கூலிப் படைகளை ஏவி விடுவோரும் பின்னர் வாய்மூடி மௌனியாகிவிடுவார்கள்!

"இந்தத் தேர்தலில், இந்தத் தொகுதிகளில் உள்ள தி. மு. கழகத்தினர் மொழிவழி அரசுத் திட்டத்தின்படி, தமிழ் அபேட்சகர்களையே ஆதரித்து, வெற்றித் தேடித் தரவேண்டும்"

—என்று பொதுச் செயலாளர் அவர்கள், சித்தூர், பொதட்டூர் பேட்டை, திருத்தணி, ஏகாம்பர குப்பம், வேப்பஞ்சேரி, நகரி ஆகிய வட்டங்களிலுள்ள கிளைக் கழகங்களுக்கு 'நம்நாடு' வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளார். இது சம்மந்தமாக தோழர் விநாயகம் எம். எல். ஏவும் அண்ணா அவர்களை இருமுறை சந்தித்துப் பேசினாராம்.

விநாயகம் என்ற பெயர் கேட்டதும், சிறுமதியாளரோடு சேர்ந்துகொண்டு அவர் நம்மீது புழுதிவாரி இறைத்த பழைய நிகழ்ச்சிகள் நமது நினைவுக்கு வரும். அந்த நெஞ்சு கசக்கும் செய்திகளை சிறிது ஒதுக்கி வைப்பதற்கு, இதோ பொதுச் செயலாளர் அறிக்கையைப் படியுங்கள்:

"தி. மு. கழகத்தின் மீது கண்டனக் கணை ஏவியவர், தோழர் விநாயகம் என்பதை, மொழிவழிப் பிரச்சினை முன்னணியில் இருக்கும் இந்த நெருக்கடியான நேரத்தில் நினைவிற்கொள்வது, பெருந்தன்மையுமல்ல; அரசியல் யூகமுமாகாது என்று தீர்மானித்தேன்...

தி. மு. கழகத் தோழர்கள் எக்காரணம் கொண்டும் சொல்லாலோ, செயலாலோ ஆந்திரத் தோழர்களிடம் பகை உணர்ச்சி காட்டக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்..."

—'மறப்போம்! மன்னிப்போம்' என்கிற முறையிலே பொதுச் செயலாளர், புது உருக்கொண்டிருக்கும் தோழர் விநாயகத்திற்கு கைலாகு கொடுத்திருக்கிறார். குணம் கண்டு குற்றம் மறந்த, கண்ணியத்தின் காவலராம் நமது பொதுச் செயலாளரின் பெருந்தன்மைக்கு தோழர் விநாயகம் நன்றி செலுத்தப்பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்—என்பதை நம்மால் சொல்லிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆந்திரத்தின் தமிழ்ப் பகுதிகளில் உள்ள தோழர்களே! மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்—

தமிழரின் உரிமை! — மொழிவழி அரசு!

—இதைத்தான் நினைவில் வைத்துக் கொண்டு, நீங்கள் வெற்றிக்கு உழைக்க வேண்டும்!

'தினத்தந்தி'யின் தவறான தலைப்பு

"சென்னை பிப்.7-ந்தேதி 'தினத் தந்தி' பத்திரிகையில், விரைவில் கூட இருக்கும் தி. மு. கழகப் பொதுக் குழுவில், போராட்டம் பற்றிய தீர்மானம் வரப்போகிறதென்று நான் சொன்னதாகத் தலைப்புக் கொடுத்து செய்தி வெளியாகியிருக்கிறது.

'தினத் தந்தி' நிருபர் என்னிடம் வந்து, பொதுக் குழு பற்றிய விபரங்களைக் கேட்டபோது, 'எதுவும் நான் இப்போது சொல்வதற்கில்லை,' என்று கண்டிப்பாகக் கூறினேன்.

'தினத் தந்தி' செய்தியின் உட்பகுதியில், நான் கூறியவைகள் விளக்கமாக இருந்தாலும்கூட, அதன் தலைப்புச் செய்தியின் இறுதியிலுள்ள 'போராட்டத்தைப் பற்றித் தீர்மானிக்கலாம்' என்ற ஹேஷ்யம் கலந்த வாசகமும் திரித்துப் பிரசுரிக்கப்பட்டவைகளாகும்.

கழகத்தின் திட்டங்களும், நடவடிக்கைகளும், அது பற்றிய அறிவிப்புகளும், பொதுக் குழுவின் முடிவுக்குப் பிறகும், பொதுச் செயலாளர் அவர்களின் ஒப்புதல் பெற்றும் வெளியிடப்பட வேண்டியவை—என்பதை நான் நிருபரிடத்தில் வலியுறுத்திச் சொல்லியும்கூட இம்மாதிரி தலைப்புள்ள ஒரு செய்தி வெளியிட்ட செயல் மிகவும் கண்டிக்கத் தக்கதாகும்.

—மு. கருணாநிதி

உளியின்வாய் போன்றுள்ள கூழாங் கல்லை,
உருட்டிக்கொண் டோடுகின்ற அருவி யோரம்;
கிளிப்பேச்சுக் கன்னியிடம் ஈர முத்தம்
கேட்டுக்கொண் டேயிருந்தேன் கனவில்! அங்கே,
பளிச்சென்றுப் புகழேந்திப் புலவர் வந்து
பாண்டியனின் வரலாறு உனக்கு வேண்டின்,
தளக்கோட்டம் எனும்சிற்றூர் தென் புறத்தில்
தோண்டிப்பார் என்றிட்டார். வாழ்த்துச் சொன்னேன்!

குரங்கின்கை விரல்போன்ற பயிற்றங் காயைக்
கொய்தபடி இருந்திட்டேன் கனவில! செய்யுள்,
தரும்பொய்யா மொழிப்புலவர், என்முன் வந்து —
தமிழரசன் எனைநோக்கி; சிலைக ளாக
இருந்திட்டப் புலவர்களைப் பேச வையும்
என்றானும்! நான்பேச வைத்திட் டேனும்!
ஒருநாளும் இதுபோல நடந்த தில்லை.
வீண்கட்டுக் கதைஎன்றார். விழித்துக் கொண்டேன்!

குச்சியினால் நூரணத்தை எடுத்துப், பிஞ்சுக்
கொழுந்தைப்போல் நாமமிடும் குடுமிக் கும்பல்,
உச்சிகுளிர்ந் திடஎன்னைப் புகழ்ந்த தாலே
ஒழுக்கமிலா ராமனையான், கடவுள் என்று,
பச்சைபச்சை யாய்ப்புளுகி எழுதி விட்டேன்.
பேர்பெற்ற பெரும்பொய்யன்; இனத் துரோகி,
இச்சகத்தில் எவருமிலை என்னைப் போல!
என்றிட்டான், என்கனவில் — இறந்த கம்பன்!

வரகரிசிப் பொரிபோல வாய் விரிந்த
வண்ணமலர் மரக்கூட்டம் நிறைந்த நாட்டார்;
முருகனிடம் நான்தோற்று விட்ட தாக
வேண்டுமெனப் பொய்சேர்த்துக் கூறு கின்றார்.
கருநாவல் மரத்தோப்பில் குடி யிருந்த
கிழவிக்கா, சுட்டபழம் என்றால் — அந்தப்
பரிபாஷை புரியாமல் போகும்? — என்று
பல்லில்லா தமிழ்ஔவைக் கனவில் சொன்னாள்.

கிணற்றைப்போல் இருக்கின்ற குகையில் வாழும்
கொடியவரிப் புலிதன்னைக் கிழித்துக், காட்டில்
பிணமாக்கிக் கொண்டிருந்தேன், கனவில்! அந்தப்
போதினிலே, திருவாத வூரர் வந்தார்.
மணிபத்து வரைபேசிக் கொண்டி ருந்தோம்.
முடிவினிலே அவர்சொன்னார்; தம்பி, உன்போல்
துணிவுள்ள தமிழன்தான் யானும். ஆனால்,
தர்ப்பைஇனம் — ஆக்கிவிட்டார் என்னை என்றார்!

வில்ஏந்திப் போர்புரிந்த சேரன்; யானை
வால்போலக் குருத்துவிடும் கரும்பு தன்னைக்
கொல்லையிலே நான்வெட்டிக் கொண்டி ருந்தேன்;
கண்தூக்கம் தருகின்ற கனவில்! என்னை,
செல்லப்பா என்றழைத்தார். திரும்பிப் பார்த்தேன்.
சாதிமத சாத்திரங்கள்; ஓடி வந்த
புல்லர்களின் கல்தெய்வம் தனை மறுக்கும்
பகுத்தறிவு மனிதன்நான், என்றார் சித்தர்!

★ ★ ★

வால்மீகி வென்றான்! வக்கீல்களைக் காணோம்!

—:(★):—

"நாட்டை இழந்து, சுகத்தை இழந்து, நல்ல மது, மாமிச பட்சணங்களை இழந்து காட்டுக்குச் சென்று காய் கறிகளைப் புசிக்க வேண்டியவனாகி விட்டேனே" என்று தாயாரிடம் இராமன் சொல்லிப் புலம்பிய காட்சியை கூத்து மேடையில் கண்டதும் 'விட்டேனுபார்' என்று படை அணிவகுப்பு நடத்திய கூடல் நகர் பக்தர் குழாத்தினர் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

கோயில் குருக்கள் குடித்து விட்டு கும்மாளம் போட்டதாக மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள்ளேயே கைது செய்யப் பட்டிருக்கிறார். இராமனுக்காக வாதம் புரிய வரிந்து கட்டிக் கொண்டு வந்த அந்த 'வக்கீல்'கள் எங்கே இப்போது? தேனைத்தான் இராமன் குடித்தான்; மதுவை அல்ல என்று தேடிப் 'புதுப்பொருள்' கொண்ட 'தெகிடுதத்தக்காரர்'கள் ஓடி ஒளிந்த 'மலை' அடிவாரங்கள் எவை?

உளம் நொந்து பயனில்லை; உண்மைச் செய்தி படியுங்கள்:—

மதுரை மீனாட்சிஅம்மன் கோயில் மடைப்பள்ளியில் வேலை பார்க்கும் கிட்டு என்கிற பார்ப்பனர் நேற்று காலையில் குடி போதையில் கோவிலுக்குள் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்ததாகக் கோவில் அதிகாரிகள் போலீசாருக்குத் தகவல் கொடுத்ததின் பேரில் போலீசார் கிட்டு அய்யரை கைது செய்து டாக்டர் முன்பு ஆஜர் செய்தனர்.

மேற்கண்ட கிட்டு அய்யர் குடிபோதையிலிருப்பதாக சாட்சியம் தந்ததின்பேரில் அவர்மீது மதுவிலக்குச் சட்டப்படிவழக்கு பதிவு செய்திருக்கின்றனர்.

பட்டம் விட்ட பிரமுகர்!

ஓவியத் துணுக்குதான் இது!—அது சொல்லும் அரசியற் செய்தி யொன்றும் இருக்கிறது. அதிகார மேட்டில் அமர்ந்து கொண்டு, திரு-கொச்சி தமிழர் மீது துப்பாக்கி வேட்டுகளைத் திறந்துவிட்ட பட்டம் தாணுப்பிள்ளை, சென்ற எட்டாந்தேதி நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பதவி இழந்து—'கனம்' குறைந்து-அரசியல் 'அநாமதேயம்' ஆகிவிட்ட காட்சியையும் கொஞ்சம் நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

பதவி சதமென்று, ஏதுமறியாத பொது மக்களின் இரத்தத் தடாகத்திலே நீச்சல் அடிப்பவர்கள் முடிவிலே இப்படித்தான் சீறிவரும் புயற்காற்றிலே 'பட்டம்' இழக்க வேண்டும்!

நடக்காத வழக்கு!

[கற்பனை]

வழக்கில் அங்கம் வகிப்போர்

வாதி	பிரதிவாதி
ஏகாம்பரநாதன் பி. ஏ; பி. எல்	கம்பன் பி. ஏ. பி. எல்,
வாதி வக்கீல்	பிரதி வாதி வக்கீல்
இராவணன் பி ஏ. பி. எல். அட்வகேட்	நீலமேகம் பி. ஏ. பி. எல்.

நீதிபதி
உலகை அளந்த பெருமாள், பார்-அட்-லா.

நீதிமன்றத்திலே ஏராளமான கூட்டம். கொலை, கொள்ளை போன்ற வழக்குளைக் கண்டும் கேட்டும் வந்த மக்களுக்கு இந்த வழக்கு விசித்திரமானதாகத்தான் தோன்றியது. நீதிபதியின் முகத்திலே சிந்தனை ரேகைகள் வலை பின்னிக் கிடந்தன. சட்ட மன்றங்களிலே பேசிப்பேசி பழக்கப்பட்ட வழக்கறிஞர்களின் முகங்களிலே கூட, மருட்சி மறைந்து நின்றது.

பிரதிவாதி கம்பர் கூண்டில் ஏற்பட்டிருக்கிறார். வாதியின் வக்கீலான இராவணன் விசாரணையை தொடங்குகிறார்,

இரா; உங்கள் பெயர் ?

கம்; கம்பன்.

இரா; கம்பன்! வழங்கும் பெயர் ?

கம்: வழங்கும் பெயரும் கம்பன் தான்

இரா; இடைக்காலத்திலே மாற்றிக் கொண்ட பெயரோ ?

கம்: இல்லை! கடவுள் காவியங்களிலே பற்றுக் கொண்ட என் தந்தை எனக்கு இட்டபெயரே கம்பன்தான் !

இரா; சரி; உமது தொழில் ?

கம்: சில ஆண்டுகளுக்கு முன்—சர்க்கார் உத்தியோகம் பார்த்திருக்கிறேன்' வக்கீல் தொழிலுக்கும் படித்தேன்; ஆனால் அந்தத் தொழிலை மேற்கொள்ள வில்லை.

இரா: காரணம் ?

கம்: என் தந்தை மரணப்படுக்கையில் இருந்த நேரத்தில் 'கம்பா, இதோ உன் பெயருக்கு ஏராளமான சொத்துக்களை எழுதிவைத்திருக்கிறேன். கௌரவத்திற்காக உன்னை நான் படிக்கவைத்தேன். படித்தாய்; பட்டம் பெற்றாய். இனிமேல்கொண்டு ஞானமார்க்க சங்கத்தில் சேர்ந்து பணியாற்றுவாய் மகனே' என்று சொன்னார். அதற்காகவே நான் வக்கீல் தொழிலுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டேன்.

இரா;– இதுவரை நீர் எந்த வழக்கிற்கும் ஆஜராகியிருக்கிறீரா?

கம்:- இரண்டு வழக்குகளுக்கு ஆஜராகியிருக்கிறேன்,

இரா:- வழக்கின் முடிவு என்ன வாயிற்று ?

கம்:- ஒரு வழக்கில் தோல்வியடைந்தேன், பிறிதொரு வழக்கை நானே 'வாபஸ்' பெற்றுக்கொண்டேன்.

இரா;- வழக்கின் விபரங்களை நான் அறியலாமோ ?

கம்;- முதல் வழக்கில், எனது கட்சிக்காரரை சர்க்கார் தரப்பில் கொலைகாரன் என்று வாதித்தார்கள். நான் இல்லையென்றேன். முடிவில் வழக்கு சர்க்கார் பக்கம் சாதகமாயிற்று.

இரண்டாவது வழக்கில், எனது கட்சிக்காரன் கள்ள நாணயம் தயாரித்ததாக சர்க்கார் வழக்குத் தொடர்ந்திருந்தது. இரண்டு தவணைகளுக்கு நான் ஆஜராகியிருந்தேன். சர்க்கார் தரப்பில் இரண்டொரு சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். அந்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் எனக்கு பாதகமாகவே அமைந்தது, எனவே வழக்கை நானுகவே 'வாபஸ்' பெற்றுக்கொண்டேன்.

இரா;- இரண்டு வழக்குகளுக்கு ஆஜராகியிருக்கிறீர்—அதுவும் சர்க்காருக்கு எதிரான வழக்குகளுக்கு! அந்த இரண்டு வழக்குகளிலும் தோல்வி அடைந்திருக்கிறீர் ! அப்படித்தானே ?

கம்:- ஆம்,

இரா;- சரி. இன்று உம்மீது வழக்குத் தொடர்ந்திருக்கும் டாக்டர் ஏகாம்பரத்தை இதற்கு முன்பாகவே உங்களுக்குத் தெரியுமா ?

கம்;- தெரியாது,

இரா:- கேள்விப்பட்டதாவது உண்டா ?

கம்:- முற்போக்குவாதி என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

இரா;- அவர் உம்மீது தொடுத்திருக்கும் வழக்கின் சாராம்சம் தெரியுமல்லவா ?

கம்;- கடந்த மாதம் 2-ந் தேதியன்று இந்த ஊரில் நடைபெற்ற ஞானமார்க்க சங்கக் கூட்டத்தில் நான் பேசியது, அவருடைய தொழிலுக்கு குந்தகம் விளைவிக்கிறது என்று அவர் சொன்ன வாக்குமூலத்திலிருந்து தெரிந்து கொண்டேன்.

இரா:- அது உண்மைதானு ?

கம்;- எனக்கு அப்படி ஒன்றும் புலப்பட்வில்லை.

இரா:- அப்படி என்னதான் நீர் பேசினீர் ?

கம்;- மடாலயங்கள் பெருக வேண்டும் என்று பேசினேன்; ஐயப்ப சாமியின் திருநீற்றால் தீராத நோயெல்லாம் தீர்ந்திருக்கிறதென்றேன். விஞ்ஞானிகள் கண்டுபிடிக்காத இலகுவான 'மந்திர இயந்திரத்தை' நமது முன்னோர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றேன். குடிக்கொடுத்தாளின் பதிகங்களை பாடினால் கண்டிப்பாக பருவமழை பெய்யுமென்றேன்.

இரா; சரி, நீர் போகலாம்.

வழக்கறிஞர் இராவணன் விசாரணையை முடித்துக் கொண்டார்.

கோர்ட்டில் சிறிதுநேரம் அமைதி நிலவியது. நீதிபதி விசாரணையை அடுத்த நாளைக்கு ஒத்திவைத்தார்.

மறு நாட்காலை. அன்று, முதல் நாளைக்காட்டிலும் நீதிமன்றத்திலே கூட்டம் அதிகம். டாக்டர் ஏகாம்பரம் கூண்டில் நிற்கிறார். பிரதிவாதியின் வக்கீலான நீலமேகம் விசாரிக்கிறார்.

நீலா: ஏன் மிஸ்டர் ஏகாம்பரம், எவ்வளவு நாட்களாக டாக்டர் தொழில் செய்து வருகிறீர்கள்?

ஏகா: ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளாக !

நீல: சென்ற ஆண்டு ஜில்லா போர்டு தேர்தலில் பங்கேற்றீர்கள் அல்லவா !

ஏகா;: அபேட்சகரே நான் தானே !

நீல: அது தெரியும் எனக்கு! விபரத்தைத்தான் கேட்டேன்.

ஏகா; இதில் விளக்குவதற்கே ஒன்று மில்லையே ! நானும் நண்பர் கம்பரும் (பிரதிவாதி) போட்டியிட்டோம். நான் ஜெயித்து விட்டேன். நண்பர் கம்பர் அவர் கட்டிய 'டெபாசிட்' தொகையைக்கூட இழந்து விட்டார். இது தான் விளக்கம்.

நீல:- கம்பர் பேச்சு உமது தொழிலுக்கும் உம்மைப்போன்றவர்களின் தொழிலுக்கும் எந்த வகையில் குந்தகம் விளைவிக்கிறது என்று விளக்கமுடியுமா?

(இந்த நேரத்தில் வாதியின் வக்கீலான இராவணன் எழுந்திருந்து)

இரா:- வாதம் செய்ய நானிருக்கிறேன் . கட்சிக்காரரிடம் வாதத்தைக் கேட்பது தன் பக்கத்து வாதம் சாரமற்றது என்பதை விளக்குகிறது.

(விசாரணை முடிந்தது. நீதிபதி உலகை அளந்த பெருமாள் அவர்கள் முதன் முதலில் கம்பரின் வக்கீலான நீலமேகத்தை பேச அனுமதித்தார். அவர் பேசுகிறார்.)

நீலமேகம்:- மதிப்பிற்குரிய கோர்ட்டார் அவர்களே. இதுவரை எத்தனையோ வழக்குகளுக்கு ஆஜராகியிருக்கிறேன். கடன் தொல்லை சம்பந்தபட்ட வழக்கிலிருந்து உடன் கட்டையேறிய வழக்குகள்வரை இந்த நீதி மன்றத்திலே நடந்திருக்கிறது. ஆனால் இப்பேர்ப்பட்ட வழக்கை இந்த முறைதான் நான் முதன் முதலாகப் பார்க்கிறேன், இது ஒரு விசித்திரமான வழக்கு ! ஒருவரின் சொற்பொழிவு இன்னொருவரின் வாழ்க்கையைப் பாதிக்கிறது என்ற புதுமையான வாதத்தை இன்றுதான் கேள்விப்படுகிறேன், மனித வர்க்கத்தில் புத்திசாலிகள் வாழ்வதால் மந்தபுத்திக்காரருக்கு இடையூறுதான் ஏற்படும். அதற்காக புத்திசாலிகளைக் கொன்று விடுவதா? அல்லது வாயடைத்துப் போகச்செய்வதா ? ஏகாம்பரம் மருத்துவர், கம்பர் மகேஸ்வரனின் புகழ் பாடுகிறவர், இருவருக்கும் மோதுதல் ஏற்பட மார்க்கமே இல்லை. இந்த வழக்கு சிந்தனைக்குரியதுதான் என்றால் 'ஒருவனுடைய வாழ்க்கைத் தெப்பம் இன்னொருவனுடைய கண்ணீர் குளத்தில்தான்' என்ற பொதுத் தத்துவம் பொசுக்கப்பட்டதாகவேண்டும். இந்த வழக்கில் கம்பர் நிரபராதி. மேலும் முன்னாள் சர்க்கார் அதிகாரியை இந்த வழக்கின் மூலம் அவமானப்படுத்திய குற்றத்திற்கும் நண்பர் ஏகாம்பரம் ஆளாகிறார்.

(நீலமேகத்தின் வாதம் முடிந்தது. பொதுமக்கள் அனைவரும் இராவணன் என்ன பேசப் போகிறார் என்பதை அறிய ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். இராவணன் பேசினார்.)

இரா:- கனம் நீதிபதி அவர்களே, எனது நண்பர் நீலமேகம் உலகத் தத்துவம் ஒன்றைக் கூறி அவரின் பலியை அதன்மேல் ஏற்றிவிட்டுப் போய்விட்டார். பிரதிவாதி கம்பரின் பேச்சு, நண்பர் ஏகாம்பரத்திற்கு மட்டுமல்ல இந்த நாட்டையாளும் அரசாங்கத்திற்கே அவமானத்தைத் தரக்கூடியது என்பேன்.

கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து அரசாங்கத்தார் நாடெங்கும் மருத்துவக் கல்லூரிகளை நிறுவி வருகிறார்கள். அதில் படித்து டாக்டர் பட்டம் பெற்றவர் வாதி ஏகாம்பரம். சுகாதாரத்திற்கும் நாட்டின் சுபிட்சத்திற்கும் பாடுபடும் டாக்டர்களை அவமானப் படுத்தும் வகையில் பிரதிவாதி கம்பர் ஐயப்ப சாமியின் திருநீறுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஐயப்பசாமி திருநீறுக்கு தீராத நோய்களை எல்லாம் தீர்க்கும் சக்தி இருக்குமானால் ஊருக்கொரு மருத்துவமனை தேவையில்லை—அரசாங்கத்தாரும் பணம் கொட்டி மருத்துவக் கல்லூரிகள் கட்ட வேண்டியதில்லை. நகருக்கொரு 'ஐயப்பா நிலையம்' போதும்! இது சர்க்காரை அவமானப் படுத்துவதாக இல்லையா? படித்தறிந்த டாக்டர்களை கேவலப் படுத்துவதாக இல்லையா ? கம்பரின் பேச்சால் விவேகமிக்க

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

மறந்து விடாதீர்கள்

''மேகத்தைக் கலைத்து மழை பெய்ய வைப்பதில் இன்னும் விஞ்ஞானிகள்கூட வெற்றிபெறவில்லை. அந்த சக்தி திருவில்லிபுத்தூர் பாடல்களுக்கு உண்டு''—இது மதவாதியின் உபதேசமல்ல; சென்னை மந்திரி ஒருவர் இவ்வாறு கடந்த வாரம் பேசியிருக்கிறார் திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில்.

மலையே வாழி!

வைரமணி விளக்குகள் ஒளிவிடும் வானப் பந்தலின் கீழே அரியாசனம் வீற்றிருக்கும் பூமி அன்னையின் தலையை அலங்கரிக்கப் பொன்னாலும், பச்சையாலும் இழைக்கப் பட்ட மணிக் கிரீடம் என்பேன் உன்னை! எப்படி யெப்படி யெல்லாமோ உன்னை வர்ணிக்கத் தோன்றுகிறது! அப்படி யப்படி யெல்லாம் நீ காட்சி யளிக்கிறாய்.

விண்ணகத்து வெண் முகில்களெல்லாம் கீழே விழுந்து கண்ணுக்கெட்டா உயரம் வளர்ந்தனவோ என்று திகைக்கிறேன், பனியால் நீ உடலை மூடிக் கொண்டிருக்கும் போது!

பனி மலையே! மற்றோர் கற்பனையும் மனதில் தோன்றுகிறது; முகத்தையும் உடலையும் வெண்துகிலால் மூடிக்கொள்ளும் 'கோஷாப் பெண்'ணோ நீ என்று ஐயுறுகிறேன். உனக்கு விடுதலைதர ஒரு 'கமால்' வரமாட்டாரா என்றும் கவலைப் படுகிறேன்.

மலையே! நீ ஒரு பெரிய மகானும். மங்கையரின் மயக்கு மொழி கேட்டும் மனங் குலையா முனிவர்களுக்கு, அசையாத உன் உறுதியை உவமையாகக் காட்டுகிறார்கள் சிலர். எனக்கல்லவா தெரியும் உன் சேதி! வலுவிலே வந்த உன் தோளைத் தழுவும் மேகச் சீமாட்டிகளின் மோகத்தை தணிப்பதற்காக—நீ உன் குளிர்க் கரத்தை நீட்ட, கரம்பட்ட அந்தக் காரிகைகள் மயங்கி, மேலே செல்ல முடியாமல் மழையாகக் கரைந்து, நதிக் கரங்களால் உன்னைச் சுற்றியணைக்கும் ஆவேசத்தை நானல்லவா நேரே பார்த்தவன்! அதற்குப் பிறகுதானே அனைத்தும் துறந்த முனிவர்களும் 'அந்தப்' பாசத்தைத் துறக்க முடியாது என்று அகிலமதிரக் கூவுகிறேன்.

மலையே! நீ ஒரு அழுத்தக்காக் காதலன். அதோடு அறிவு நிறைந்த கவிஞன். அதுவும் நன்றி மறவாத கவிஞன். கவிஞன், எழுந்த கருத்தை மக்களிடம் வெளியிடுவான். நீயும் விழுந்த மழையை மாநிலம் செழிக்க வழங்குகிறாய்.

மலையரசா! நீ வளராவிட்டால் — வையமெங்கும் உன் அகிலும் தேககும் நிறைந்த உயர்ந்த தோள்களை நிமிர்த்தா விட்டால்-வளமேது? வாழ்வேது? வாழ்க உன் வைரத் தோள்கள்!

பொன்னும் பொருளும் தருவதால் பூமிக்கோர் வள்ளலாய்-உலகிற்கு உதவி செய்வதால் பொது நலத்தொண்டனாய் — புகழேந்தி நிற்கும் புவி மகுடமே! நீயோர் கலைஞனுங்கூட! நீயில்லா விட்டால் எகிப்துநாட்டு சிற்பங்கள் ஏது? எல்லோரா குகைதான் ஏது? எழிலூட்டும் அஜந்தா உண்டா? சிற்றன்ன வாசலின் சிறட்பும், மாமல்ல புரத்து மகிமையும் காணவும் போமோ!

சிற்பக் குகையாய் சிரிக்கும் மலையே! உன் அகண்ட நெற்றியில் ஜொலிக்கும் கலைகள் எல்லாம் உயர்ந்தவை. உன்னதமானவை. உலகுக்கு அழகூட்டுபவை.

ஆனால் மலையே! ஒரே குறை! மூலைக்கு மூலை கோடிக்கணக்காய்த் தெய்வம் குவிய மூலப் பொருளாய் நீயே ஆனாய்!

ஆயினும் மனிதனை விட நீ உயர்வு மனிதன் உன் தலையை மிதித்தான் என்றாலும், மனிதனைவிட நீ உயர்வு!

காரணம்:

மனிதனின் மதவாதப்படி—

'கடவுள் மலையைப் படைத்தார்!'

அந்த மலையின் துளியால் கடவுளைப் படைக்கிறான் மனிதன்! ஆகவே அந்த மனிதன் தாழ்ந்தவன்.

எஸ். எஸ். தென்னரசு

"சாந்தா, அவன், நித்தில மணிக்கோட்டையை நிர்மூலமாக்கி சக்கரவர்த்தியிடம் ரத்தினப் பதக்கம் பெற்றவன்தான்; பவழக் காட்டுக் கொற்றவனை பாதம் பணியவைத்து கட்டியங் கூறச் செய்த போர்ப்புலிதான்; ஆதிக்க மோகம் கொண்ட அணிமுடியரசுகளின் ராஜ கோட்டைகள் புழுதிமேடுகளாக்கப் பட்ட 'வீழ்ச்சிக்காதை' களின் கதாநாயகன்தான்; என்ருலும் அந்த சமர்க் காளையின் முடிவு பாராட்டியவர்களாலேயே பரிகசிக்கத் தக்கதாய் விட்டது சாந்தா! ஆம்; கீர்த்தி பாடியவர்கள் கிண்டல் செய்தார்கள். ஏன்? பதவிக்காக பண்பை இழந்தாஞ? அல்லது நாட்டைக் காட்டிக் கொடுக்க நாச வேலைகள் புரிந்தாஞ? அல்ல! அல்ல! வீரஞக வாழ்ந்தான். ஆஞல் களங்கத்தோடு கண்ணைமூடி விட்டான். சாந்தா, அந்த சோகக் கதையை ஒரு முது கிழவர் சொல்லக் கேட்டேன். அதையேதான் உனக்குத் திருப்பிச் சொல்லப் போகிறேன் கேள்!

★

மங்கல புரத்து மாதேவி மீஞவின் கட்டளைக்கு சிரம் தாழ்த்தி பணிபுரிந்த படைவீரர்களில் அவர்களும் இருவர், ஒரே கண்ணுடியில் முகம்பார்த்து அழகு சேர்த்து மங்கலபுரத்து மண்ணில் ஒற்றுமைக்கோர் எடுத்துக் காட்டாய் விளங்கிய பெருமை அவர்களுக்குத்தான் உண்டு. கருப்புடை தரித்து, கையிலே பந்தம் ஏந்தி கோட்டை மதில்களை காவல் புரியும் காரிருள் வேளையாக இருந்தாலும், இரும்புக் கவசம் பூண்டு, இடுப்பிலே குத்துவாள் சொருகி, முன்னே முரசு முழங்க பின்னே பரணிபாடி களம்புகும் அணி வகுப்பாக இருந்தாலும் அவர்கள் இருவரும் இணைபிரிந்து நின்றதில்லை. படைவரிசையின் பெயர்ப் பட்டியலில் கூட "வெற்றிமணி, குணதிலகன்;" "குணதிலகன் வெற்றிமணி" என்றுதான் இருந்திருக்குமே யன்றி இடையிலே வேறு பெயர் இருந்திருக்க முடியாது.

பூங்குழலி!—அவர்கள் எண்ணத்தில் அரும்புகட்டி உள்ளத்தில் மலர்ந்த நறுமலர் நங்கை இவள். அந்த ஒற்றை ரோஜா இரட்டை இதயங்களிலும் குளிர் மணம் பரப்பி வந்தது: ஆஞல் இந்த உலகத்தில், தந்தைக்கும் மகனுக்கு முள்ள பாசம் முறியாமல் உடன்பிறந்த சகோதரர்களுக்குள் சச்சரவுகள் நடவாமல், உற்ருர் உறவினரை உதறித் தள்ளாமல் ஒரு காதல் காவியம் முற்றும் பெற்றதாக நாம் எங்கே பார்க்க முடிகிறது! அதற்காக பூங்குழலி நண்பர்களின் நட்புறவுக்கு பாதகமாக முளைத்து விட்டாள் என்று சொல்லுகிறேன் என எண்ணி விடாதே சாந்தா. சர்ப்பங்களின் உளம்பாய்ந்து அவைகளை சதிராட வைக்கும் சக்தி மகுடிக்கு உண்டு என்ருலும், அவைகளில் சித்தப்பிரமை கொண்டவைதானே ஓடி வந்து பாம்பாட்டியின் பெட்டிக்குள் அடைபடுகிறது? பூங்குழலியின் அழகு மகுடி வெற்றிமணியை பெட்டிப் பாம்பாக்கியது: அதஞல் வெற்றிமணி நட்புக்குத் துரோகம் செய்து விட்டான் என்று சொல்ல முடியுமா? மாலை நேரத்தில் கடலோரத்து மணல் சரிவில் சிட்டி வைத்து விளையாண்ட செங்கீரைப் பருவம் முதல் ஆடிப்பாடி அகமகிழ்ந்த அந்த மூன்று உயிரோவியங்கள் இப்போது இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துவிட்டன. ஆம்; சாந்தா, வெற்றி மணியும், பூங்குழலியும் இல்லற விளக்கேற்றி அந்த இன்ப ஒளியில் கண்மூடிக்களித்திருந்தார்கள். ஒரே பாசறையைச் சேர்ந்த அந்த இருவரும் இப்போதெல்லாம் சந்திப்பதுகூட அபூர்வ நிகழ்ச்சியாகிவிட்டது.

ஒரே சிங்காதனத்தையும், சிவப்புக்கல் கிரீடத்தையும் காக்க வேண்டிய அந்த 'மாஜி நண்பர்கள்' எப்போதாவது சந்தித்தாலும் முகம் கொடுத்துப் பேசுவது அறவே அறுந்துபோய்விட்டது. வளர்பிறையும் தேய் பிறையும் வந்து வந்து போயின. இலை உதிர் காலம் மாறி மாறி வந்து கொண்டிருந்தது; நண்பர்களின் நெஞ்சில் மாற்றம் தட்டுப்படவில்லை; அதற்கான மார்க்கமும் மூடப்பட்டுக் கிடந்தது.

★

திடீரென்று ஒருநாள் போர் முரசு ஒலித்துவிட்டது. "மங்கல புரத்தின் எல்லைக் கோட்டிலுள்ள நமது தங்கச் சுரங்கத்தை ஏமூர் நாட்டுப்படை கொள்ளையிடுவதை நம்மால் அனுமதிக்க முடியாது வீரர்காள்! தாயகத்தின் கருவூலத்தை தறுதலைகள் சூறையாடுவதை மங்கலபுரத்து மீஞதேவி தாங்க மாட்டாள்! புறப்படுங்கள்; அந்தப் புல்லர்களின் கொட்டத்தை அடக்கி வாருங்கள்! அந்நிய அரசுக்கு உரிமைப்பட்ட புதையலை சுரண்டப் பார்க்கும் அந்த கண்ணிய மீர்த்த சூதர்களுக்கு புத்தி கற்பித்து வாருங்கள்' என்று அரண்மனையின் உச்சிமாடத்தில் நின்று களத்திலே அணிவகுத்து நின்ற படை வரிசைக்கு அவர்களின் உள்ளங்களில் வீரக்கனல் கொழுந்துவிட்டெரியும் வகையில் மீஞதேவி வாழ்த்துக்கூறி அனுப்பி வைத்தாள்.

சாந்தா, போர் என்றதும், பாரதத்திலே வரும் பதினெட்டுநாள் போரும், பலசாலி வாலியை பக்கம்நின்று கொன்றுவிட்டு தத்துவார்த்தம் பேசும் இராவண, இராம யுத்தமும்தான் உன் நினைவுக்கு வரும். மங்கலபுரத்தாருக்கும் ஏமூர் நாட்டாருக்கும் நடந்த இந்தப் போர் புராண காலத்துப் போர்களைப் போன்றதல்ல. இரு நாடுகளின் வாழ்வும் தாழ்வும் அந்தப் போரிலேதான் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. தந்தையைப்பிரிந்த தனயன்மார்கள், தாலியறுத்த தன் வயோதிகத் தாயை விட்டுச் சென்ற குடும்பத்தின் ஒற்றைமணித் திலகங்கள், இதயப்பூங்காவில் சிறகடித்துப் பறந்த இன்பத் தேன்சிட்டுகளை கடமைக்காக ஒதுக்கி வைத்துச் சென்ற கட்டிளங் காளைகள் அனைவருமே களம் புகுந்திருந்தார்கள்! அவர்களிலே வெற்றி மணி மட்டிலும் காதல் கள்ளஞகவே இருக்க முடியுமா சாந்தா? அவனும் தான் பூங்குழலியை விட்டுப் பிரிந்து சென்ருன்: இளமைத் தடாகத்தில் அவளோடு துணை நீச்சல் போட்டு களிப்புத் தாய்க்கும் அந்தக் கட்டழகுப் பெட்டகத்தை வெற்றிமணி மறந்துதான் வெஞ்சமர் வீரஞகக் குதித்திருந்தான் களத்தில்! ஆண்டு முடிந்தது: ஆஞல் போர் முடியவில்லை. வாலிபப் பட்டாளம் தினம் தினம் களத்திற்கு அனுப்பப் பட்டு வந்தது. மூன்ருண்டுகள் வரை வெற்றி யாருக்கு என்பது கேள்விக் குறியாகவே அமைந்து விட்டது. நான்காவதாண்டின் துவக்கத்திலேதான் ஏமூர் நாட்டினர் தங்களது தவருன செயலுக்கு மெய்வருந்தி சமாதான உடன்படிக்கைக்கு இணங்கி முன் வந்தார்கள்.

அன்றைய தினமே, மறவர்களைப் பெற்றெடுத்த மறத்திகளின் சார்பில் போர் முடித்து ஊர்திரும்பும் மைந்தர்களை வரவேற்க மங்கலபுரத்தில் ஒரு பிரத்தியேக வரவேற்பு விழா நடைபெற்றது. ரத்த முத்திரை பெற்று நாடு திரும்பிய புத்திரர்களை உச்சிமோந்து ஆரத்தழுவி பெற்ற தாய் தந்தையர் வரவேற்ற காட்சி மெய்மயிர் சிலிர்க்கவைத்து மங்கலபுர மேன்மைக்கு மெருகு பூச்சாக அமைந்திருந்தாலும் கண்ணீர் மொட்டுகளை கடைக் கண்ணுக்கு இழுத்த வண்ணம், 'வருவார் கொழுனன்' என்று வழிமேல் விழிவைத்து ஏமாந்த ஏந்திழை பூங்குழலியின் சோகநிலை வெற்றி விழாவின் சோபிதத்தை ஓரளவு மட்டாக்கத்தான் செய்தது: வெற்றிமணியின் நெற்றிக்குத் திலகமிட காத்துக் கிடந்த காதல் கிழத்தி ஏமாந்தாள். விழா முடிந்து ஜோடி ஜோடியாக வீடு செல்லும் பேறு அவளுக்குக் கிடைக்கவில்லை, விக்கலும் விம்மலும் தொண்டையைக் கவ்வ, அந்த இன்பக்கொடி இல்லம் ஓடிஞள். காலதேவனும் அவள் வாழ்க்கையைப் பின்தொடர்ந்தான்

★

போருக்குச் சென்ற வெற்றிமணி என்ன ஆஞன்? இங்கேதான் அவர்களின் வாழ்க்கைக் கடலில் குறுக்கிட்ட இரண்டாவது துன்பச்சுழல் ஆரம்பமாகிறது. போரிலே நாளுக்கு நாள் வலுவை இழந்துவந்த ஏமூர் நாட்டு அரசதங்களால் கைது செய்யப் பட்டு கண்காணு தீவுக்கு அனுப்பப் பட்டுவந்த மங்கலபுரப் படையினரில் வெற்றிமணியும் சிக்கிக் கொண்டான். மனிதவர்க்கம் கண்டிராத, சுற்றிலும் கடல் சூழ்ந்த மண்மலைத் தீவில் அந்த மாவீரன் கட்டவிழ்த்து விடப்பட்டான். மொழியை மறந்து நாட்டைத் துறந்து, ஏழாண்டுகாலம் காட்டு விலங்குகளிடையே அலை மோதிக் கிடந்த வெற்றிமணி எலும்பும் தோலுமாய் வழிதவறி வந்த மரக்கலம் மூலம் எப்படியோ மங்கலபுரம் சேர்ந்து விட்டான். ஆஞல் அவன் தாண்டி வந்த கடலைக் காட்டிலும் அவன் உள்ளத்திலே வேகமாக அடித்துக் கொண்டிருந்த ஆசை அலைகள் மங்கலபுரத்திற்கு வந்ததும் அயர்ந்து ஓய்ந்தது. செத்துப் போன கடலாயிற்று அவன் உள்ளம் அவனை, யாராலும் அந்த நகரத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை, அவன் குடியிருந்த வீடு புல்முளைத்துப் போயிருந்தது. பக்கத்தில் நின்ற வேப்பங்கன்று மரமாகி வேரோடி மண் வீட்டின் சுவற்றைப் பிளந்து நின்றது. கட்டியணைத்து மனையாளின் கனிவாயை முத்தமிட துடித்துக் கிடந்த அவனுடைய வரண்ட உதடுகளின் வெடிப்புக் கோடுகள் இன்னும் அதிகரித்தன.

"பூங்குழலியையா விசாரிக்கிருய்? பிச்சைக்காரக் கோலத்தில் இருந்து கொண்டு இந்த நாட்டின் பிரதம தளபதியின் மனைவியைவினவுகிருயா?-நீ யாரப்பா?" பூங்குழலியைப் பற்றி யாரைக் கேட்டாலும் இந்தகு மறுமொழி தான் வெற்றிமணிக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. சாந்தா, கதையே உனக்கு புதிராக இருக்கிறதல்லவா! இந்தப் புதிர் உனக்குமட்டுமல்ல, எனக்கு மட்டுமல்ல, வெற்றிமணிக்கே ஒரு புதிராகத்தான் இருக்கிறது.

★

கிழடுதட்டிய வளைந்த பூவரச மரம். மட்டை பிளந்த ஈச்ச

● தொடர்ச்சி 12-ம் பக்கம்

One side of the page is dark

லட்சிய விளக்கம் பெற்றார்!

"சுமார் 18 ஆண்டுகட்கு முன் நீங்கள் புதுவைக்கு வரும்போது இந்திய விடுதலை இயக்கத் தொண்டராக—கொள்கை வீரராக இங்கு வந்தீர்கள். அன்றைய புதுவை மக்களின் வாழ்க்கைநிலை இன்று மிகவும் வேறுபட்டிருக்கிறது.

பிரஞ்சிந்தியா என்ற அமைப்பில் அடங்கியிருந்த புதுவை மக்கள்—இன்று உங்கள் தலைமையில் இயங்கும் இந்திய ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறார்கள். எனினும் அவர்கள் என்றும் மொழியால் தமிழர்கள்—இனத்தால் திராவிடர்கள்! அண்டையில் உள்ள தமிழ்ப் பகுதிகளோடு என்றும் நீங்காத இயற்கையான தொடர்புடையவர்கள்.

மொழி, கலை, நாகரீகம்—நில நீர் கனிப்பொருள்வளம் ஆகியவற்றால் சிறந்து விளங்கிய திராவிடநாடு இன்று இந்திய மத்திய ஆட்சியின் அடிமையாக நடத்தப்படுகிறது. எனவே முன்னர் தென்னாட்டு நிலப்பரப்பில் நிலவி வந்த ஆட்சிகளை ஆதாரமாகக் காட்டி — திராவிடநாடு தனி நாடாக்கப்பட வேண்டும் என முழங்குகிறார்கள் தென்னாட்டு மக்கள்! இது எந்த வகையிலும் இந்திய நாட்டைத் துண்டுபோடும் பிரிவினைக் கொள்கை ஆகிவிடாது. முன்பிருந்த ஆட்சி உரிமை மீண்டும் கேட்கப்படுகிறது.

மேலும் வடநாட்டு மத்திய ஆட்சியின் முடிவுகள் தென்னாட்டுக்குத் தீங்கை விளைவிக்கின்றன. எல்லாப் பெரிய திட்டங்களும் நிதி உதவிகளும் வடநாட்டுக்கு! தொழில் நிலையங்கள், ஆலைகள் அணைக்கட்டுகள் வடநாட்டில்!

வளமான தென்னாட்டு நிலத்தை வறுமை நாடாக்கி வரிகொடுப்பவராக்கி — வடநாடு வாழ்கிறது. தென்னாடு தேய்ந்து வருகிறது.

இந்த நிலையைக் கண்ட தமிழர்—தமிழாலே இணைந்து-உணர்வால் ஒன்றி—"திராவிடநாடு திராவிடருக்கே" என்று குரல் கொடுக்கிறார்கள்.

இந்தக்குரலைத் திரித்துக்கூறி, வகுப்பு வாதத்தை. சமூக அநீதியை வளர்த்து ஆட்சியாளரை மக்கள் மீது ஏவி விடுகின்றன ஆரியப்பனியா, முதலாளிப் பத்திரிகைகள்!

இப்பொய்ப் பிரசாரத்தைக் கேட்டுத் துடி. துடித்துத் தென்னாட்டுமக்களின் ஜீவாதாரப் பிரச்சினையை அலட்சியப்படுத்துகிறீர்கள்! இதனை நிறுத்தி உண்மையைப் புரிந்து கொள்ள அக்கறை கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

சமாதானவாதி—சமதர்வாதி என்று உங்களைப் பற்றிக் கூறக் கேட்கிறோம். திராவிடநாட்டுப் பிரச்சினையிலும் தாங்கள் தீர்க்கமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்திமொழித் திணிப்பாலும். வடநாட்டு வியாபாரிகளின் சுரண்டலாலும், மத்திய ஆட்சியின் பிடிவாதப் போக்காலும் மனங்குமுறி நிற்கும் திராவிடமக்களின் எழுச்சிக்குரலை நீங்கள் நல்லமுறையில் கேட்டு, உணர்ந்து, தீர்வு காணவேண்டும்."

இங்ஙனம்:
திராவிடர் முன்னணி—புதுச்சேரி.

[நேரு புதுவைக்கு வந்தபோது நமது புதுவை தோழர்கள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அவருக்கு உணர்த்திய நமது லட்சிய விளக்கத்தின் சிறு பகுதி இது.]

வழியனுப்பு விழா!

22-1-55-ந் தேதி காலை 10-மணிக்கு அண்ணாமலை நகர் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் லண்டன் சென்றுள்ள தமிழ் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரனாரைப் பாராட்டி ஒருவழியனுப்பு வாழ்த்து விழா நடைபெற்றது.

விழாவிற்கு பல்கலைக் கழக துணைவேந்தர் அ. இராமநாதன் தலைமை வகித்தார். வழியனுப்பு வாழ்த்திதழை தோழர் வீரமணி வாசித்தளித்தார். தோழியர் விசயகுமாரி இலக்கியக் கழக வாழ்த்துப்பா பாடினார். பலமன்றங்களின் சார்பில் பேராசிரியருக்கு மாலைகள் சூட்டப் பெற்றன. பின்னர் மாணவத் தோழர்கள் க. முத்தையா, கி. வீரமணி பொன்னுராசு, இரா. மாணிக்கம், பூவராகன் ஆகியோர் டாக்டர் சிதம்பரனாரின் பணி குறித்து பாராட்டிப் பேசினர்.

23-1-55 அன்று இரவு சிதம்பரம் புகை வண்டி நிலையத்தில் டாக்டர் சிதம்பரனாரை அறுநூறுக்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கூடியிருந்து வழியனுப்பி வைத்தனர்.

நடக்காத......

5-ம் பக்கத் தொடர்ச்சி

மருத்துவர்கள் மட்டுமல்ல, விஞ்ஞானிகள் கூட அவமானப் படுத்தப் பட்டிருக்கிறார்கள். 'பதிகங்கள் பாடினால் பருவ மழை தவறாது. விஞ்ஞானிகள் கண்டு பிடிக்க முடியாத 'மந்திர இயந்திரங்களை' யெல்லாம் நமது முன்னோர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். சட்டம் படித்தர்வ அதுவும் ஒரு காலத்தில் ஆட்சி பீடத்தின் ஒரு அச்சாணியாக விளங்கியவர் பேசக்கூடிய பேச்சல்ல இது! வேத உபநிஷத்துக்களின் மகிமை பற்றிப் பேசி வயிறு வளர்க்கும் வேதாந்தி பேசவேண்டியதை — இகவாழ்வு மாயமென்று திரித்துக் கூறி தன் இன்பத்திற்கு அச்சாரம் பெறும் துண்மார்க்கர்கள் பேச வேண்டிய வரட்டுத் தத்துவத்தை கம்பர் பேசியிருக்கிறார். கண்களின் தோற்றத்திலிருந்தே கருவிலிருக்கும் சிசு ஆணா பெண்ணா என்று கூறிவிடும் இந்த விஞ்ஞான யுகத்தில் 'பதிகத்தைப்பாடு; பருவ மழை பெய்யும்' என்றுரைப்பது அறிவுலகிற்குச் செய்யும் துரோகமாகும் — நானிலத்தின் நல்வாழ்வுக்கு உலைவைப்பதாகும். கம்பரின் பேச்சால் மருத்துவமனைக்கு வருவோரின் எண்ணிக்கை குறைந் திருக்கிறது. திரு நீற்றையும், திருவில்லிபுத்தூர் ஆண்டாளையும் நம்பி நோயாளிகள் செத்துக் கொண்டு வருகிறார்கள். கம்பரின் பேச்சு நஞ்சு விளைய வித்தூண்டுவதாகும்"

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. ஊரெல்லாம் இதே பேச்சு. விசித்திரமான வழக்கு என்று மூக்கில் விரல் வைத்தவர்களெல்லாம் 'கம்பர் அப்படி பேசியிருக்கக் கூடாதுதான்' என்று பேசத்தலைப் பட்டு விட்டார்கள்.

தீர்ப்புக் கூறும் நாள் வந்தது. கோர்ட் துவங்கி நெடுநேரம்வரை வாதி, பிரதி வாதி இருவருமே நீதி மன்றத்திற்கு வரவில்லை. பிற்பகல் இரண்டு மணிக்கு பெரும் பெரும் வெட்டுக்காயங்களுடன் டாக்டர் ஏகாம்பரம் நீதிமன்றத்திற்கு தூக்கி வரப்பட்டார். பயங்கரமான மோட்டார் விபத்து ஒன்றில் ஏகாம்பரம் சிக்கிக் கொண்டிருக்கிறார் என்பது பிறகுதான் தெரிய வந்தது. ஆனால் அதுவரை கம்பர் வரவில்லை—தந்தி மட்டும் பறந்து வந்தது. அதில் "மூன்று நாட்களுக்கு முன்பு நிலகிரி மலைச்சாரலில் டாக்டர் ஏகாம்பரம் என்பவரின் மோட்டாருக்கும் கம்பர் என்பாரின்மோட்டாருக்கும் ஏற்பட்ட விபத்தில் கம்பர் படுகாயமடைந்து மதுரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருந்தார். வேதனை பொறுக்க முடியாமல் கம்பர் இன்றுகாலை நஞ்சு குடித்து இறந்து விட்டார்" என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

★

வரப்பெற்றோம்

சென்னை எஸ். வி. அம்பாள் கம்பெனியைச் சேர்ந்த (பெரியார், அண்ணா முகப்புடன்)மாதகாலண்டரும், மற்றும் நாதன் காலண்டரும், போர்வாள் டைரியும், மதுரை அண்ணா நாட்குறிப்பும் கிடைக்கப் பெற்றோம்-நன்றி.

நெறிஞ்சி முள்

வடவர் ஏகாதிபத்தியத்தால் தென்னாடு ஒதுக்கப் பட்டுவருகிறது என்று நாம் சொன்ன நேரத்திலெல்லாம் கேளாக் காதர்களாக இருந்தவர்கள், தென்னாட்டு வரிப் பணத்தைக்கொண்டு வடநாடு வளம் கொழிக்கும் சீமையாக மாற்றப்பட்டு வருகிறதே என்று தமிழகத்தின் நலன் விரும்பிகள் வேதனைக் குரல் எழுப்பிய நேரத்திலே அந்த வேதனைக் குரலை அமிர்தகானமாக ரசித்துக் கொண்டே நிலவு நேரத்தில் ஊஞ்சலில் ஆடிப்பாடி மகிழ்ந்த மந்திரிமார்கள் இப்போதுதான் உணர்ந்திருக்கிறார்கள். தேஷ்முக்கிடம் கைகட்டி, வாய் பொத்தி, நிற்கவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்ட பின்புதான்-நாடு நகைத்த பிறகுதான் இந்த எண்ணம் அவர்களுடையநெஞ்சிலே நெறிஞ்சி முள்ளாக குத்தியிருக்கிறது. தேஷ்முக் மட்டும்தான் இதற்கு மூலகாரணம் என்று கூறிவிட முடியாது. தங்களுடைய கட்சிக்கு தென்னாட்டில் வலுத் தேட வேண்டும் என்ற சபலத்தில் கூட்டிய 'ஆவடி' நிகழ்ச்சிகளும் தென்னாட்டுப் பிரிவினைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

கோவையில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாத அரங்கில் கலந்துகொண்ட கனம் சுப்ரமணியம் எப்போதும் பேசியறியாத தன்னுடைய வாயால்—நம்மை துரோகியென்று தூற்றிய வாயால்—வடநாடு — தென்னாடு என்று பேதம் காட்டிப் பேசிகிறார்களே இந்த வகுப்புத் துவேஷிகள் என்று நமக்கு வசைமாலைதொடுத்த வாயால் ஒரு புரட்கிக் கருத்தைச் சொல்லிவிட்டார். இந்தியாவின் மொத்த வருமானத்தைக் கொண்டு வடநாட்டிலேயே தொழில் வளத்தை பெருக்கிக் கொள்கிறீர்களே என்று நம்மைப் போல் வெளிப் படையாகக் கூறவில்லை சுப்ரமணியர், தனது படிப்புக்கு நேர் விரோதமான வகையிலே மறைமுகமாகப் பேசியிருக்கிறார்.

"மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களில் மட்டும் தொழிற்சாலைகள் குவிந்தால் அந்த சில இடங்களில் மட்டுமே செல்வம் குவிய நேரிடும்: இதனால் விபரீதமான அரசியல்விளைவுகள் ஏற்படும்" — சுப்ரமணியம் தான் இப்படிப் பேசியிருக்கிறார். என்ன அந்த விபரீத அரசியல் விளைவுகள்? தென்னாடு தேய்வதால் ஏற்படப் போகும் அரசியல் விளைவுகள் என்ன? முடிவு கட்டிக் கொள்ளுங்கள்!

சிறிய வயதிலே

பிள்ளை மனம் கல்லா....?

தீ! எங்கும் தீ! திரும்பும் திசை எல்லாம் 'ஜிவ்' வென்று பற்றி எரிந்து கொண்டிருந்த பயங்கரத் தீ! ஊரிலேயே அதுதான் மிகப்பெரிய பஞ்சாலை. அது தீப்பற்றிக்கொண்டதென்ருல்... ஒரே கும்பல்! 'ஓகோ' என்ற அலறல்!

அந்தக் கூட்டத்திற்குள் ஒரு கிழத் தாய் அழுது கொண்டிருந்தாள். "ஐயையோ! என் மகனைக் காணுமே! தீயிலே மாண்டு போனுனு? நான் என்ன செய்வேன்..." என்று புலம்பிக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஒரே தடுமாற்றம்; தத்தளிப்பு!

அந்த சமயத்தில் ஆலைக்குள்ளிருந்து ஒரு பதிமூன்று வயது சிறுவனை தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவன் உடம்பில் தீப்புண்கள்!

அந்தக் கிழத்தாய் அவனிடம் ஓடினுள். தன் மகனு என்று ஆவலுடன் பார்த்தாள். மறுகணம் அவள் கண்கள் அகல விரிந்தன. அவன் அவளது மகனேதான்!

"ஐயோ! கண்ணே! அபாய சங்கு ஊதிய உடனேயே வெளியில் வந்திருக்கக் கூடாதா?" என்று கத்தினுள்.

சிறுவன் அப்போது தான் தன் அம்மாவைப் பார்த்தான். "அம்மா! நீ பிழைத்துக்கொண்டாயா? நான் உன்னைத் தேடிக் கொண்டல்லவா ஓடினேன்? நீ வேலை செய்ய வேண்டிய இடமெல்லாம் தேடினேன். அதனுல்தான் தீயில் சிக்கிவிட்டேன் ... அப்பாடா... நல்லவேளை!" என்று சொன்னுன். தன் உடல் வலியையும் மறந்து சிரித்தான்.

தன் அம்மாவுக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்று தீயில் சிக்கிய அந்த ஆலைத் தம்பி யார் தெரியுமா? சொன்னுல் திகைப்பீர்கள்; அவன்தான் இருபதாவது நூற்ருண்டின் துவக்கத்தில்அமெரிக்காவின்பிரபல கோடீஸ்வரர்களில் ஒருவனுக விளங்கிய ஆண்ட்ரூ கார்னீக் பிரபு!

பெரிய மனிதர்கள்

★ "அடிமையாகாதே!" ★

சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"எட்டு வயது தங்கை ஒன்று தெருவில் விளையாடிக் கொண்டிருந்ததாம்; அப்போது ஒரு மனிதன் வந்தானும்; 'மிட்டாய் வாங்கித் தருகிறேன்' என்று தங்கையை அழைத்தானும். கொஞ்ச தூரம் சென்றதும் தங்கையின் தங்கச் சங்கிலியைக் கழட்டிக் கொண்டு ஓடியேப் போய் விட்டானும்"-இப்படி ஒரு செயதி சமீபத்திய செய்தித்தாள்களில்வந்திருந்ததே படித்தீர்களா?

"என்ன மோசக்காரத்தனம்!" என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? அதே சமயம் அந்தத் தங்கை செய்ததும் தவறு தானே! மிட்டாயிக்காக மட்டுமல்ல; பணத்துக்காக இதைவிடப் பெரிய—மிக மிகப் பெரிய தவறுகளெல்லாம் சிலர் செய்து விடுகிருர்கள்; பிறகு உணருகிருர்கள்; 'ஓகோ' என்று அழுகிருர்கள்.

அப்படி பணத்திற்கு அடிமையாகி பெரிய தவறு ஒன்றைச் செய்யத் துணிந்த தமபி ஒருவனின் கதையை இந்த வாரம் சொல்லுகிறேன்; படியுங்கள் :

★

சுழலும் பம்பரம்—ஓயாத அலை ஓசை—சலசல வென்று ஓடியபடி இருக்கும் ஆற்று வெள்ளம்—இவைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? ஆனுல் இவைகளை எல்லாம் ஒரு சிங்காரச் சிறுவனின் உருவத்தில் கண்டிருக்க முடியாது.

அதோ பாருங்கள், "குமரர் இல்லம்" என்று ஒரு 'போர்டு' தொங்கிக் கொண்டிருக்கிறதே, அந்த மாளிகைக்குள். அங்கே தோட்டத்துக்கு நீர் பாய்ச்சியபடி இருக்கிருனே உத்தமன், அவனைத் தான் நான் குறிப்பிடுகிறேன். ஏன் தெரியுமா? அவன் ஒரு சுழலும் பம்பரம்—ஓயாத அலை ஓசை! புரிகிறதா? காலையில் சூரியன் எழும்புவதற்கு முன்பே எழுந்து விடுவான்; ஆனுல் இரவிலோ, ஊளையிடும் தெருநாய்களும் தூங்கிய பிறகுதான் படுப்பான். அதற்கிடையில் அவன் செய்து முடிக்கும் வேலைகள் கொஞ்ச நஞ்சமல்ல! ஏன், அத்தனை பெரிய மாளிகையின் ஒரே வேலைக்காரன் அவன்தான் என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

குமரர் என்ற அந்த மாளிகைக்காரருக்கு உத்தமன்மேல் அலாதியான பிரியம்! 'அனுதையாக வந்தான்; அப்பப்பா! அயராமல் உழைக்கிருனே!' என்று அவர் எண்ணினுரோ, அல்லது தனக்குக் குழந்தை இல்லாத பெரும் குறையைத் தீர்க்க வந்தவனைப் போல் இருக்கிருனே என்று களித்தாரோ, யாருக்குத் தெரியும்? ஆனுல், ஒன்று மட்டும் உண்மை — உத்தமனின் மேல் அவருக்கு கொள்ளை அன்பு—எல்லையில்லாத ஆசை!

ஆனுல்...அப்படிப்பட்ட உத்தமன் ஒரு முறை 'பெரும்பாவி' யாகி விட்டான்; பொல்லாத துரோகியாகி விட்டான்; பணத்திற்கு அடிமையாகி பாழும் செயல் ஒன்று செய்து விட்டான். 'என்ன?' என்று இப்போதே கேட்காதீர்கள். இன்னும்படியுங்கள்.

★

ஒரு நாள் மாலை — வழக்கம் போல் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான் நமது உத்தமன். பாவம், காரியத்திலேயே கண்ணுக இருந்த அவன் வேறுபக்கம் ஏன் திரும்பப் போகிருன்? எதற்குக் கவனிக்கப் போகிருன்? தன் பக்கத்தில் வந்து நின்ற உருவத்தை அவன் கவனிக்கவேயில்லை.

"உத்தமா" என்று அழைத்தது ஒரு குரல்; அவன் திரும்பிப் பார்த்தான்.

வேறு யாருமல்ல; மாளிகையின் கணக்கப்பிள்ளைதான் நின்று கொண்டிருந்தார்.

"என்னங்க வேணும்?"–வழக்கமான மரியாதையுடன் கேட்டான் உத்தமன்.

"ஒன்றுமில்லை, உத்தமா! நான் இப்போது எங்கிருந்து வருகிறேன் தெரியுமா?

"இது என்னங்க கேள்வி? எனக்கெப்படித் தெரியும்?"

"ஆமாம், ஆமாம்! உனக்கெப்படித் தெரியும்?... நான் நேராக டாக்டர் வீட்டிலிருந்து வருகிறேன்..."

"டாக்டர் வீட்டிலிருந்தா? ஐயையோ! யாருக்கு...உம்புக்கு என்னங்க?"—கையிலிருந்த தண்ணீர் வாளி 'தொபீர்' என்று கீழே விழுந்தது. உத்தமன் பதறினுன்.

'எதற்கு உத்தமா இப்படி பதறுகிருய்? யாருக்கும் எதுவுமில்லை. நமது முதலாளி இருக்கிருரே குமார், அவர் இரவில் தூங்குவதேயில்லை. அதுதான் உனக்குத் தெரியுமே! அது விஷயமாகத்தான் டாக்டரிடம் போனேன்"

"டாக்டர் என்னங்க சொன்ருர்?"

"என்ன சொன்ருரா? பெரிய குண்டையே தூக்கிப் போட்டு விட்டார் உத்தமா! இந்த நிலைமை நீடித்தால், பிறகு பெரிய அபாயமாம்-உயிருக்கே ஆபத்தாம்! அதற்காகத்தான் என்னிடம் தூக்க மருந்தும் கொடுத்திருக்கிருர்..."

"அப்படியா? அதை என்னிடம் கொடுங்கள்...நான் கொண்டு போய் ஐயாவிடம் கொடுக்கிறேன்..."—அவசரமாகக் கையை நீட்டினுன் உத்தமன். அவனுக்கு ஒரே படபடப்பு! துடிதுடிப்பு!

கணக்கப்பிள்ளை லேசாக சிரித்தார். "உத்தமா! என்ன அவசரம்? சொல்வதை முழுவதும் கேள். நானும் ஐயாவிடம் போனேன். மருந்துவிஷயமாகச் சொன்னேன். ஆனுல், ஏமாந்தேன். "மருந்து; மாத்திரை' என்று சொல்லிக் கொண்டு என் பக்கமே வரக்கூடாது; என் உடம்பு சரியாகத்தான் இருக்கிறது"–என்று சத்தம் போடுகிருர் ...... அதற்காகத்தான் உன்னிடம் வந்தேன்..."

"நான் சொன்னுல் மட்டும் சாப்பிடப் போகிருரா, என்ன?"

"அது நடக்காது உத்தமா! ஆனுல் நீ நினைத்தால் அவரை சாப்பிட வைக்க முடியும் இந்த மருந்தை...?"

"நான் நினைத்தாலா..."

"ஆமாம்! முதலாளியின் உயிருக்கு வரும் ஆபத்தைத் தடுக்க நீ உதவமாட்டாயா, என்ன?... இந்த மருந்தை எப்படியாவது முதலாளியின் வயிற்றுக்குள் செலுத்திவிட வேண்டும்"

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

பிறைவானம்...

○ 9-ம் பக்கத் தொடர்ச்சி

"ஐயையோ! அவருக்குத் தெரியாமலா?"

"தெரிந்தால் நடக்காதே உத்தமா! இரவு அவருக்குப் பால் கொடுக்கிறாய் அல்லவா. அதில் இந்த மருந்துத் தூளைக் கலந்து விடேன். அதிலென்ன கடினம்? ஐயாவின் உடல், நாம் சரியாகக் கவனிக்காததால் கெட்டுவிட்டது என்ற ஊராரின் பழிச்சொல் வரச் கூடாது உத்தமா!...அவர் நலமுடன் இருந்தால்தானே நமக்கு வாழ்வு..."-தொண்டைஅடைக்க விம்மினார் கணக்கப்பிள்ளை. ஆனால் அந்த அழுகைக்குள் மறைந்திருந்த வஞ்சகத்தை உத்தமன் எப்படி உணருவான்? அவன் சிலைபோல் நின்றான்.

"என் உத்தமா பேசாமல் நிற்கிறாய்? இந்தா; இந்த பத்து ரூபாய் பணத்தை வேண்டுமானாலும் வைத்துக் கொள். எனக்காக அல்ல; உனக்காகஅல்ல; ஐயாவின் உயிருக்காக இந்த வேலையைச் செய்!"

பத்து ரூபாய் நோட்டு ஒன்றை உத்தமனின் கையில் வைத்தார் கணக்கப்பிள்ளை. உத்தமன் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். "போதாதா? இந்தா இன்னும்..." என்றார் கணக்கப்பிள்ளை. நாலைந்து பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்தார். எண்ணாமல் அவன்கைகளில் வைத்துத் திணித்தார். உத்தமன் தடுமாறினான். தத்தளித்தான். ஒரு ரூபாய் நோட்டைக் கூடக் கண்டிராத அவனது கண்முன்னே பல பத்து ரூபாய் நோட்டுகள்! உத்தமன் அவைகளை வெறிக்கப் பார்த்தான். அவை வாய்விட்டுச் சிரிப்பதைப் போல் இருந்தது. 'கணீர்; கணீர்' என்று கேட்ட அந்தப் பணத்தின் சிரிப்பொலி உத்தமனை மயக்கியது. அவன் லேசாகச் சிரித்தான். கணக்கப்பிள்ளை மீண்டும் பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்தார். அவன்கையில் திணித்தார். உத்தமன் வாய்விட்டுச் சிரித்தான். திடீரென்று நோட்டுகளைப் பைக்குள்ளே திணித்தான். அதே சமயம் கணக்கப்பிள்ளை தனது பையிலிருந்து ஒரு மருந்துப் பொட்டலத்தை எடுத்தார். உத்தமனின் கையில் வைத்தார். உத்தமன் நகர்ந்தான்.

"உத்தமா; பத்திரம்! ஜாக்கிதையாகச் செய்!"—கணக்கப்பிள்ளை கடைசி அறிவிப்பு கொடுத்தார். ஆனால்...ஆனால்...கொஞ்சதூரம் சென்ற அவர் நின்றார்; திரும்பிப் பார்த்தார்; தனக்குள்ளேயே சிரித்தார்; பைத்தியக்காரனைப்போல சிரித்தார். ஏன்? அந்தச் சிரிப்புக்கு என்ன பொருள்?

★

இரவு வந்தது!

வழக்கத்திற்கு மாறாக வானம் அன்று இருண்டு கிடந்தது. ஒரே கரிய இருள்!

துடிக்கும் நெஞ்சம் — நடுங்கும் உடல்—படபடக்கும் கைகள் — இத்துடன் உத்தமன் அந்தப் பொல்லாத வேலையைச் செய்தான். பாலில் தூக்க மருந்தைக் கலந்தான். முதலாளியின் படுக்கை அறையிலே வைத்தான்; திரும்பினான்; வெளியேவந்தான்.

தோட்டத்தில் சற்று நேரம் உட்கார்ந்தான். அவனுக்குத் தூக்கமே வரவில்லை. எப்படி வரும்? பையிலிருக்கும் பணத்தை ஒரு முறைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். இதை வைத்து என்ன செய்வது?— இப்படி யோசித்தான். திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. முதலாளிக்கு மருந்து கொடுத்த நல்ல செய்தியை கணக்கப் பிள்ளையிடம் சொல்லி விட்டு வந்தால்... இப்படி நினைத்தான். உடனே எழுந்தான். பக்கத்துத் தெருவிலிருந்த கணக்கப் பிள்ளையின் வீட்டை நோக்கி ஓடினான். அவரது வீட்டையும் நெருங்கி விட்டான். ஆனால் ...மறுகணம் திடுக்கிட்டு நின்றான். ஏன்? வீட்டிற்குள்ளிருந்து எழும்பிய பயங்கர சிரிப்பு சப்தம்தான் அவனை நிறுத்தியது. உத்தமன் கூர்ந்து கவனித்தான். கணக்கப் பிள்ளைதான் சிரித்துக் கொண்டிருந்தார். குடிவெறி அவருக்கு; தட்டுத் தடுமாறி பேசும் குரலும் கேட்டது. "மருந்து கொடுத்துட்டேன் அந்தக் குமரனுக்கு...இன்னைக்கு மட்டும் தூங்கிறதுக்கல்ல; இனி என்னைக்குமே தூங்கிறத்துக்கு...... கணக்கிலே நான் களவாடியதெல்லாம் இனிமே அவன் கண்களுக்குத் தெரியாது...ஆமாம்... மருந்தல்லடி அது... விஷம்!...... ஹா ஹ் ஹா"

"விஷமா!"—மறுகணம் உத்தமன் அலறினான். "ஐயையோ! என்ன காரியம் செய்து விட்டேன்!" என்று கூவினான். 'சடா'ரென்று திரும்பினான். ஓடினான்; தலை தெறிக்க ஓடினான்; மாளிகையை நோக்கிப் பறந்தான். அதே சமயத்தில் அவன் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டுகளும் பட பட வென்று காற்றில் பறந்து சென்றன. அதைக் கவனிக்காமல் ஓடிக் கொண்டே இருந்தான் உத்தமன். மாளிகையை அடைந்தான். தோட்டத்துக் கதவைப் 'படா ரெ'ன்று திறந்தான். அதேசமயம் அந்த அதிர்ச்சியில் 'தடால்' என்று கீழே விழுந்து நொறுங்கியது 'குமரர் இல்லம்' என்ற அந்த போர்டு! உத்தமன் அதைப் பார்த்தான். அதேசமயம் அவன் கண்கள் கலங்கின. மாளிகைக்குள் பாய்ந்தான், முதலாளியின் அறையை நோக்கி தடதட வென்று ஓடினான். "பாலை இன்னும் அவர் சாப்பிடாமல் இருக்கக் கூடாதா?" என்று பதறியது அவன் நெஞ்சம். அறைக்குள் நுழைந்தான். முதன் முதலாக பால் 'டம்ளரை'க் கவனித்தான். ஆனால்...அது காலி! பால் சாப்பிடப்பட்டு விட்டது!

உத்தமனின் தலை 'கிர்' ரென்று சுழன்றது. கட்டிலை கவனித்தான். அங்கே குமரர் நினைவிழந்து கிடந்தார். 'அவர் குமரரா? என் முதலாளியா? இல்லை; இல்லை! விஷம் குடித்த மனிதர்! செத்துப் போன மனிதர்! பிணம்! பிணம்!—உத்தமனின் மனம் என்னென்னவோ எண்ணியது. "ஐயோ! ஐயா உங்களைக்கொன்று விட்டேனே!" என்று கதறினான். அவனது கதறல் அந்த இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கிரீச்சிட்டது.

கைகள் இரண்டையும் தலையில் வைத்து அழுத்திக் கொண்டு பைத்தியம் பிடித்தவனைப் போல் நின்றான் உத்தமன். குமரரின் உடலைப் பார்க்கவே பயந்தான். மீண்டும் அலறினான். ஆனால் அதே சமயம் அவன் எதிர்பாராத ஒன்று நடந்தது. படுக்கையில் கிடந்த குமரர் திடுக்கிட்டு எழுந்தார்... "என்ன? என்ன? என்ன சப்தம்?" என்று துடிப்புடன் கேட்டார்.

உத்தமன் திடுக்கிட்டான். "ஐயோ! நீங்கள் இன்னும் சாகவில்லையா?" என்று க்த்தினான். கண்களை கைகளால் மூடிக் கொண்டு கத்தினான்.

குமரர் விழித்தார்.

உத்தமன், 'ஐயோ, ஐயா! நீங்கள் இன்னும் சாகவில்லையே, ஏன்? நான் உங்களைக் கொன்று விட்டேனே! பாலில் விஷம்கலந்து விட்டேனே!" என்று புலம்பினான்; அழுதான்!

குமரர் பேசினார்; "உத்தமா! நீ என்ன சொல்கிறாய்? அழாமல் சொல். பாலை நான் சாப்பிடவேயில்லையே! படுத்தேன்; லேசாகத் தூங்கி விட்டேன்; இப்போது உன் அலறலைக் கேட்டு எழுந்தேன்" என்றார்.

'பாலை சாப்பிடவில்லையா? அப்படியானால்....?' உத்தமன் இப்படிக் கேட்டான். அதே சமயம் அறையின் ஒருமூலையில் எதோ 'சடசட' வென்று சப்தம் கேட்டது. இருவரும் அந்தத் திசையில் திரும்பினார்கள்; பார்த்தார்கள். அங்கே...? கால்களைப் படபட வென்று அடித்துக் கொண்டு செத்துக் கொண்டிருந்தது, திருட்டுத்தனமாக பாலைக் குடித்துவிட்ட கிழட்டுப் பூனை!

'அப்பாடி' என்று கூவினான் உத்தமன். குமரரிடம் ஓடிவந்தான். அவர் முதலாளி என்பதையும் மறந்தான். கால்களைக் கட்டிக் கொண்டான். விம்மி விம்மி அழுதான்!

★

அப்புறம் என்ன? என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்களேன். உத்தமன் இப்போது 'உத்தமன்' தான்; 'குமரர் இல்ல'த்தில் தான் இருக்கிறான். ஆனால் சில சமயங்களில் திடீரென்று இருந்தாற் போலிருந்து அழுவான்; புலம்புவான். அப்போது அவன் அருகில் நின்று ஒட்டுக் கேட்டால் காதில் என்ன விழும் தெரியுமா? "அப்பப்பா! என்ன முட்டாள்தனம் செய்யப்போனேன்! பணத்துக்காக கொலைகாரனாக மாறப்போனேனே! என்ன தவறு செய்தாலும் பணத்துக்கு மட்டும் அடிமையாகி விடக்கூடாதப்பா! என்ன பணம்! பொல்லாத பணம்"-என்று அவன் புலம்புவான்.

—சொர்ணம்

வருந்துகிறோம்

மதராஸ் பிக்சர்ஸ் உரிமையாளர் திரு. ஏ. எல், எஸ். சீனுவாசன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரது தந்தையான ஏ. எல். சாத்தப்பா அவர்கள் 4-2-55 ல் சிறுகூடல்பட்டியிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

தந்தையை இழந்து வாடும் ஏ.எல்.எஸ். சீனுவாசன், கவிஞர் கண்ணதாசன் அவர்கட்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எத்தனை நாளைக்கு?

★

வைரம் மின்னொளி பரப்பக் கூடியதுதான்; அதற்காக கண்ணாடிக் துண்டையும் வைரம் என்று சொல்லி விடுவதா? அப்பாவிகள், ஆள் நடமாட்ட மில்லா அடர்ந்த காடுகளிலே வசிக்கக் கூடியவர்கள் வேண்டுமானால் அந்த ஏமாற்று பேச்சில் மயங்கிடலாம். எல்லோரையும் ஏமாற்றி விடலாம் என்று எண்ணினால் ஏமாற்ற எண்ணியவர் நிச்சயமாக ஏமாறக் கூடும்.

காங்கிரஸ் ஆட்சி பீடத்தை அவர்கள் செங்கோலேந்திய நாள் முதலாக 'இது மதசார்பற்ற சர்க்கார்' என்று சொல்லிக் கொண்டுதான் வருகிறார்கள். மாற்றார்கூட அந்த இலட்சியத்தை ஒப்பினார்கள், பாராட்டினார்கள். ஆனால் காங்கிரஸ் சர்க்கார் அந்த இலட்சியப்படி நடந்து கொண்டுவருகிறதா? என்று பார்க்கின்ற போது ஆளும் வர்க்கத்தினரின் நடைமுறைப் போக்கே முற்றிலும் மாறுபாடுடையதாக இருக்கிறது. மாநாடுகளிலே இந்துமதச் சின்னம், சட்டசபையின் நுழைவு வாயிலிலே இந்துமதச் சின்னம், இந்துமத சட்டத்திற்கு பெரும் பெரும் தலைவர்களெல்லாம் எதிர்ப்பு! காங்கிரசின் இலட்சிய முத்திரைக்கு இது எதிர்ப்பானதில்லையா? காந்தீயத்திற்கு முரணானதில்லையா? கவர்னர் பிரகாசாவிற்கு இவை யெல்லாம் தெரியாமலா இருக்கும் "இந்தியா தன்னை இந்து ராஜ்யம் என்று பிரகடனப் படுத்தியிருக்கலாம். ஆனால் இப்படிச் செய்வது சுதந்திரத்தை மறுப்பதாகும்" என்று முஸ்லீம் கல்விச்சங்க பொன் விழாவில் பேசியிருக்கிறார். இப்போதென்ன மதச்சுதந்திரம் வாழுகிறது என்றே தெரிய வில்லை. ஆட்சி பீடத்தை வர்ணாச்சிரமக் கோட்டையாக அமைத்துக் கொண்டு கண்ணாடித்துண்டை வைரமென்பதைப்போல 'இது மதசார்பற்ற சர்க்கார்' என்றால் அதை எத்தனை நாட்களுக்கு மக்கள் நம்புவார்கள்!

ஆகஸ்டு தியாகி அனல் கக்குகிறார்!

"ஐயகோ தேபர்ஜி! பதவி பானம் உங்களுக்கு போதையேற்றிவிடாது என்றெல்லாம் எண்ணினேன் முதுமை பெரு புதிய தலைவ—நிச்சயமாக அவர் 'முகஸ்துதி'யின் வைரியாக இருப்பார் என்று எண்ணியவர்களெல்லாம் ஏமாற வேண்டியதுதானா? விழி நீர் சிந்திச் சிந்தி விவேகியானவர்; ஆகவே அவர் வியர்வைக்கு மதிப்புத் தருவார் வீழ்ந்துபட்டுக் கிடக்கும் ஏழையர் சமுதாயத்தை கைதூக்கிவிடுவார் என்று ஆசைக் கனவு கண்டார்களே அவர்களெல்லாம் என்னுவது தேபர்ஜி? அடித்தளத்து மக்களின் இன்ப நினைவுகளை துன்பக் கேணிக்குள் போட்டு மூடிவிட்டு கீர்த்தியும், கித்தாப்பும் பெற்றுவிடலாம் என்ற எண்ணுதீர்கள்!

தித்திக்கும் சொல்லழகால் எத்திக்கும் புகழ் பரப்பும் காங்கிரசின் வெற்றிக்கு வழிதேடிவிடலாம் என்று பகற்கனவு காணுதீர்கள்! சிந்தனையாலும், சரீர உழைப்பாலும் சட்ட மேதையானவர் நீர், ஆகவே ஏய்த்தவர்கள் வீழ்ந்ததில்லை என்பதும், எல்லோரையும் எல்லா காலத்திலேயும் ஏய்த்துவிடமுடியாது என்பதும் நீங்கள் அறியாத எச்சரிக்கைகளாக இருக்கமுடியாது.

ஒரு காலத்தில் நேர்மையாளராக இருந்த நீர், பேரறிஞர் பெர்னாட்ஷா எந்த வேலையை கடிந்து கூறினாரோ. அந்த வேலையை—குமாஸ்தா வேலையை வாழ்வின் முதற் பணியாகக் கொண்டு இன்னல்பல கண்ட சத்தியவான், ஏழை நிரபராதி ஒருவன் கூண்டிலேற்றப்பட்டு நிற்பது கண்டு நெஞ்சு தளராமல் பணமில்லாத அவனுக்காக வாதாடி வெற்றி தேடித்தந்த ஏழை பங்காளன்—நீங்களா பண முதலைகள் கொடுத்த 4 லட்ச ரூபாயை பரிசாகப் பெறுவது? பெறலாமா அப்படி? சோஷலிசம்தான் காங்கிரசின் லட்சியம் என்று ஆவடியிலே முழங்கியதெல்லாம் வெறும் 'வாய்ப் பறை'தானா? ஒருகாலத்தில் காந்தியாரின் பிரியத்திற்கு இலக்காக விளங்கிய உம்மை—இன்றைய உமது பேச்சைக் கேட்டால் உணர்வற்ற ராஜ கட்டம்கூட ரத்தக்கண்ணீர் வடிக்குமே! போராட்டக் காலத்திலே தொழிலாளரின் நல்வாழ்வுக்காக அயராது கூவிய உமது அன்றைய அறைகூவலையும் இன்று நீர் அமெரிக்க டாலர் சீமான்களுக்கு பரிந்து வாசிக்கும் பக்கமேளத்தையும் கண்டு வங்கச் சிங்கங்கள், வடநாட்டுத் தங்கங்கள் வாய்விட்டுச் சிரிக்கமாட்டார்களா?

உம்மை காங்கிரஸ் தலைவராக அ. இ. கா. க. தேர்ந்தெடுத்தமைக்காக—உங்களுக்கு அவசியமானால்—மனச்சான்று உறுத்தினால் நேருவுக்கு ரகசியமாக நன்றி செலுத்தி இருக்கலாம். அதற்காக தென்னாட்டுக் காங்கிரசையே அவமானப் படுத்தலாமா? "காங்கிரஸ் எங்கே தோன்றியது? அதை வளர்த்தது யார்? அதற்காக ரத்தம் சிந்திய உத்தமர்கள் எவர் எவர்? தியாகத்தின் சின்னங்கள் என்று காந்தியார் யாரைக் குறிப்பிட்டார்?" இவையெல்லாம் தங்களுக்கு தெரியாததல்ல தேபர்ஜி! அப்படி இருந்தும் 'காங்கிரசின் ஒரே தலைவர் நேரு என்று சொல்லலாமா? அகில இந்தியக் கட்சி என்று பேசும் தங்களை போன்றவர்கள் பேசக் கூடிய பேச்சா இது? காங்கிரசிற்கு ஒரே ஒரு தலைவர்தான் இருக்கிறாரா? தென்னாட்டின் பெருந்தலைவன் காமராஜ் காங்கிரசிற்கு ஒரு தலைவனில்லையா? காமராசர்தான் 'மதராசி'; ஆச்சாரியாரைக்கூட நீங்கள் தலைவரென்று மதிக்கவில்லையா? அப்படியானால் காங்கிரஸ் இயக்கத்திற்கு நேருவின் வாழ்நாட்களோடு மூடுவிழா நடத்திவிடலாமென்று எண்ணமா? அல்லது நேருவுக்குப்பின் காங்கிரஸ் தானாக செத்துவிடும் என்று முடிவு கட்டிவிட்டீர்களா?

ஒரு வேளை தென்னாட்டு திராவிட இயக்கத்தாரின் புரட்சி வலுத்து வருவதை எண்ணி தென்னாட்டில் காங்கிரசை மூடிவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்று முன்கூட்டியே அறிந்துதான் தென்னாட்டுத் தலைவர்களைப் புறக்கணித்துவிட்டு 'நேரு மட்டும் தான் தலைவர்' என்று சொன்னீர்களா? புரியும்படி சொல்லுங்கள் புதிய தலைவரே! தென்னாட்டை அவமதித்தவர்கள் விரைவிலே நெஞ்சம் புண்ணாகி தப்பித்தேன் பிழைத்தேன் என்று புலம்பி ஓடிய கதைகளை உங்கள் வாழ் நாளில் எத்தனையே முறை படித்திருக்கிறீர்கள். என்னை ஒரு 'அனமதேயம்' என்று எண்ணிவிடாதீர்கள்; ஆகஸ்டுக் கலவரத்தை தேவகோட்டையில் முன் நின்று நடத்தி கலெக்டர் அலுவலகங்களைக் கொளுத்தி அதனால் கஷ்டநஷ்டங்களை அனுபவித்து இன்று முடமாகிப் போய் என் இல்லத்திலே கிடக்கிறேன். எனக்குசொத்துண்டு; சொந்தக்காரர்களும் இருக்கிறார்கள்; நான் தியாக நிலத்திற்கு மனுப்போடவில்லை. அந்த விருதைப் பெற வேண்டுமென்ற ஆசை எனக்கும் உண்டு; ஆனால் அன்று நமக்குத் துரோகம் செய்தவர்களுக்கெல்லாம் இன்று எப்படியோ தியாக நிலம் கிடைத்திருக்கிறதை எண்ணித்தான் நான் அதைப் பெற முயற்சிக்கவில்லை."

— ஆகஸ்டுத் தியாகி.

கலைத்தோட்டம்

'பிர்மா' வேலையல்ல!

★

காலை—காட்டேறி வேஷங்கள் போட்டு பழக்கப்பட்ட நம் நாட்டிற்கு, சரித்திரகால வீரர்களையும், விவேகிகளையும் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தும் ஹாலிவுட்காரர்களின் மேக்–அப் திறமை மகத்தானது; வியக்கத்தக்கது!

ஏனைய உலக நாடுகள் அனைத்தும் மூக்கின்மேல் விரல்வைக்கும் அளவுக்கு அவர்கள் 'வேஷம் போடும்' வித்தையை வளர்த்திருக்கிறார்கள். மலைபோல் இருப்பவனை எலிபோல் ஆக்கிக் காட்டுவார்கள்; மன்மத ரூபனை மந்தி அலங்காரமாக்குவார்கள்; ஏறு போல் நடைபோடும் வீரனை ஒரு நொடியில் கூனனாக்கி விடுவார்கள். இந்த அற்புதங்கள் நிகழ்வதற்கு சதையை அறுத்துக்கொண்ட நடிகைகள், எலும்புத் துண்டுகளில் ஒன்றை வெட்டிக் கொண்ட நடிகர்கள், ஏராளம்! கதாபாத்திரங்கள் தத்ரூபமாக அமைய வேண்டுமென்பதற்காக மேலை நாடுகளில் அவ்வளவு கவனம் செலுத்தப்படுகிறது!

இதோ; படத்திலே சிலை வடிவில் இருப்பது யார் தெரியுமா? மாசிடோனியாவில் பிறந்து, அகிலத்தையெல்லாம் கட்டியாள வேண்டுமென்னும் பேராசையால் படைநடத்தி, கடைசியில் ஜீலம் நதிக்கரையில் தன் எண்ணம் தடைபடவே, தாய்நாடு திரும்பிய வீரன் அலெக்சாண்டர்தான் அது!

பக்கத்திலே நின்று கொண்டிருக்கும் மனிதன் யார்? ஒரு சமயம், 'அது அலெக்சாண்டரின் புகைப்படமா?'

—என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இல்லை; இல்லை, போட்டோ கேமரா கண்டுபிடிப்பதற்கு முன்னரே பாபிலோனில் அலெக்சாண்டர் பிணமாகி விட்டானே; நிச்சயம் அது போட்டோ அல்ல!

ஹாலிவுட்டிலே அலெக்சாண்டரின் வாழ்க்கை சம்மந்தமான சினிமாப் படமொன்றை எடுக்கப் போகிறார்கள். அந்தப் படத்தில் ரிச்சர்ட் பர்ட்டன் என்பவர்தான் அலெக்சாண்டராக நடிக்கப் போகிறார். அவர்தான் இப்படிக் காட்சி அளிக்கிறார்.

ரிச்சர்ட் பர்டடன், நவீன சினிமாஸ்கோப்பில் தயாரிக்கப்பட்ட 'ரோப்' என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்து புகழ் பெற்றிருக்கிறார். அலெக்சாண்டர் வேஷத்திலும் அவரது புகழ் இன்னும் பெருகுமென்று பலரும் எதிர்பார்க்கினறனர்.

சரித்திரத்திலே நடமாடியவன் நாளை சினிமாக் கொட்டகையின் திரையிலே நடமாடப் போகிறான். புயலுக்கும், பூகம்பத்துக்கும் தப்பி, காலத்தின் கருணையால் மிஞ்சியிருக்கும் ஒரே ஒரு சிலையை வைத்துக் கொண்டு ஹாலிவுட்காரர்கள் இப்போது அதன் பிரதிபிம்பத்தைத் தயாரித்து விட்டார்கள்.

பவுடர் தடவுவது பகல் வேஷக்காரர்களின் செயல்—கூத்தாடிக்காரர்களின் வயிறு வளர்ப்பு—என்று கேலி பேசுவோர், மேக்–அப் போடுவதும் ஒரு கலை என்று உணர்த்தும் ஹாலிவுட் பக்கம் தங்கள் கண்ணோட்டத்தைத் திருப்பட்டும்!

★

12 11.2.55

கடைசிப்பக்கம்

ஒரு சந்தாதாரன்; கல்லுப்பட்டி

(?) நீங்கள் அனுப்பும் பத்திரிகை எனக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லையே; இது ஏன்?

என்ன செய்வது? அந்தக் காலத்தில் இருந்தது போல் இப்போது புருக்கழுத்தில் கட்டி செய்தி அனுப்ப முடிவதில்லையே! ஜெகஜீவன்ராமின் தபால் இலாக்காவைத் தாண்டியல்லவா பத்திரிகைகள் வாசகர்களைச் சந்திக்க வேண்டியிருக்கின்றன!

சாகூல் அமீது; கமுதி

(?) எனது ஊரில் உள்ள மதவாதிகள் சீர்திருத்தக் கொள்கைகளை பலமுறை எடுத்துரைத்த போது கூட மனம் மாறவில்லை; இதற்கு என்ன செய்வது?

உமது ஊரில் மட்டுமல்ல; உலகெங்கிலுமுள்ள மதவாதிகளின் நிலைமையே இப்படித்தான்! சுலபத்தில் திருந்திவிடும் சுபாவமுடையவர்களாக அவர்கள் இருந்தால், ரஸ்புட்டீனை வெறிநாயைப் போல ரஷ்ய மக்கள் சுட்டுக் கொன்றிருப்பார்களா? மக்களது மனம் மாறினால்தான், அவர்களை மடக்கி வைத்திருக்கும் 'மகானுபாவர்'களும் மாறுவார்கள்!

சங்கரன்; பாண்டுலோயா.

(?) இன்பத்தின் எல்லை எது?

துன்பத்தின் ஓரக்கோடுதான்!

வெற்றிமணி; திருக்கோட்டியூர்.

(?) நீர் இந்தியாவின் ஜனாதிபதியானால்....

உஸ்...எனக்கு வேண்டாமய்யா அந்த சோம்பேறி உத்யோகம்!

தமிழ்த்துரை; உறையூர்

(?) தமிழ் மக்களை சுட்டுக் கொன்ற வெறிபிடித்த பட்டம் தாணுவின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது, கம்யூனிஸ்ட்டுகள் நடுநிலைமை வகித்த காரணம் என்ன?

இதிலென்ன ஆச்சரியம்? புதிய கல்வித் திட்டத்தை ஆச்சாரியார் காலத்தில் காப்பாற்றியதுகூட அவர்கள் தானே! முன்னுக்குப் பின் முரண்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூலாதாரத் தத்துவம்!

சாந்தாமணி; கொழும்பு.

(?) கம்யூனிஸ்டுகள் எதற்கெடுத்தாலும் ரஷ்யாவையும் சீனாவையும் துணைக்கழைத்துப் பேசுகிறார்களே; இதன் காரணமென்ன?

இது தெரியாதா உமக்கு? ரஷ்யாவும், சீனாவும்தான் கம்யூனிஸ்டுகளுக்கு 'மாமியார் வீடு'!

சி. பா. தை; ஈரோடு

(?) உங்களைத் திட்டி எழுதும் பத்திரிகைகளுக்கு நீங்கள் ஏன் மறுப்பு எழுதுவதில்லை; கண்டிப்பதுமில்லை?

கள்ளிக்கு ஏன் முள்வேலி? கழுதைக்கு ஏன் கடிவாளம்? எனவே தான் நாங்கள் அந்தக் 'கிழிசல் ஏடு'களைப் பொருட்படுத்துவதில்லை.

தெட்சணு; யாழ்நகர்

(?) திராவிடநாடு கிடைத்து, காலப்போக்கில் நீங்கள் வளர்ந்தபின்னர், இலங்கையை காலனியாக்கிக் கொள்வீர்கள் என்று என் நண்பர் ஒருவர் சொல்கிறார். இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

காலனி பிடிக்கும் ஏகாதிபத்யக் கொள்கை சுதந்திர திராவிட குடியரசிற்கு நிச்சயம் ஏற்படாது.

சென்னை

இயலிசை நாடகக் கழகத்தினர்

அளிக்கும்

தியாகத் தீ

என்ற தமிழ் சமூக நாடகம்

13-2-55 ஞாயிறு மாலை 5-30

அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும்

ஏ. என். சி. பாபு. அ. பொ. அரசு எஸ். எஸ். நடராஜன் மற்றும் பலர் நடிப்பர்

திருமண அழைப்பிதழ்

வணக்கம்

என் மகள்

திருமதி

எஸ். துர்காவிற்கும்

சென்னை

திரு. கே. வாசுதேவன்

அவர்கட்கும்

18-2-55 வெள்ளிக்கிழமை

காலை 9-மணிக்கு

அறிஞர் அண்ணா

தலைமையில்

சென்னை 1, வைதிநாதமுதலி தெரு நெ. 35 எண்ணுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும். தாங்கள் வருகை தந்து விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்

டோளூர்-சுப்ரமணியன்

வேண்டுமானால் உலகப் படத்தில் திராவிட நாட்டை அலங்கரிக்கும் கால்-அணியாக இலங்கை இருக்குமே தவிர காலனியாக இருக்கவே இருக்காது.

சுலைமான்; வாணியம்பாடி

(?) மாலெங்கோ ராஜினாமா செய்யக் காரணமென்ன?

அரசாங்க நிர்வாகத்தில் தனக்கு அனுபவமில்லை என்ற உணர்வு கடந்த இருபத்தி இரண்டு மாதங்களுக்குப் பிறகு திடீரென்று ஏற்பட்டதால்தான்!

மாசிலாமணி; நாகை

(?) ஆந்திராவில் கம்யூனிஸ்ட்கள் ஜெயித்துவிட்டால் வெளிநாடுகளில் இந்தியாவின் கௌரவம் போய்விடுமென்று தேபார் பயப்படுகிறாரே;-இது ஏன்?

கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாதென்பார்கள். பாவம்; தேபார் அமெரிக்காவும், பிரிட்டனும்தான் 'வெளிநாடுகள்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். ரஷ்யாவும், சீனாவும்கூட வெளிநாடுகள் தானென்று அவருக்குத் தெரியாது போலும்!

அங்குசாமி; வேப்பேரி

(?) பிரெஞ்சு நாட்டு பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ், தி. கோ. பிரதமர் பட்டம் தாணு, ரஷ்யப் பிரதமர் மாலெங்கோவ் — இந்த மூவருடைய வீழ்ச்சியையும் உம்மால் இணைத்துச் சொல்ல முடியுமா?

முடியாதையா, முடியாது. முதலாவது வருந்தத் தக்கது; இரண்டாவது நாம் எதிர்பார்த்தது; மூன்றாவது எதிர்பாராதது-நமக்கு தற்போது புரியாததும்கூட!

ஆர்யா டூத் பிரஷ், ஆர்யா பார்மசி

இவைகளின் பிரதிபலிப்புதான்

திராவிட பீடி

TRADE MARK

தொழிற்சாலை திறப்பு விழா

10-2-55 முதல் எல்லா கடைகளிலும் திராவிட பீடிகளையே கேளுங்கள்.

விபரங்களுக்கு :

திராவிட பீடி அலுவலகம்,

தெப்பக்குளம் : : திருச்சி

புனுகுச்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

மரத்தை நம் நெஞ்சுக்கு இழுத்து வரும் உருவம் கொண்ட வெற்றிமணி அந்தப் பூவரசமரத்தின் உச்சிக் கிளையில் ஒன்றிப்போய் சாய்ந்து கிடந்தான். குழிவிழுந்த அவன் கண்பலகணிவழியாக பிரதம தளபதியின் மாளிகைக்குள் ஊடுருவிப் பாய்ந்தது. அசைந்தாடும் வெள்ளிக் குதிரையில் ஆறுவயதுப் பாலகன் அமர்ந்திருந்தான். வைர நகை பூட்டி வசீகரத் தோற்றத்தினளாய் தங்கத் தகடு மேவிய ஊஞ்சலில், தளபதி ஆட்டி விட பூங்குழலி அதில் அமர்ந்து அமிர்தகான மிசைத்தபடி இருந்தாள். அவ்வளவுதான்! வெற்றிமணியின் விழிகள் ஒளி இழந்தன, மறுகணமே அந்தக் கம்புஉடல் மண்ணிலே சாய்ந்தது. சாந்தா, யார் தெரியுமா அந்தப் பிரதம தளபதி? 'ஒரே கண்ணாடியில்முகம் பார்த்து அழகு சேர்த்த' குணதிலகன்தான் சாந்தா அந்தத் தளபதி! தனது பால்ய காலத்து அன்புக்கரசி,—இடைக்காலத்தில் நண்பனுக்கு மனைவியான பூங்குழலி, நாயகனை இழந்து தவிப்பதைக் கண்டு அவன் நெஞ்சு துடித்ததாம்.

ஒரு முறைக்கு பன்முறை அந்த புனிதவதியை வேண்டினனாம். "வெற்றிமணி வேற்றூரின் வேல் பாய்ந்து களத்திலே வீழ்ந்துவிட்டான்' என்று சொன்னவர் பேச்சை நம்பி அந்தப் பொன்னழகி தனது கணவனின் உயிர்த் தோழனை, அவன் பிரதம தளபதியாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்னாளன்று ஏற்றுக் கொண்டாளாம்!

★

"மாடப் புறாக்கள், தன் துணையை இழந்துவிட்டால் துன்புற்றுத் தவிக்கிறது. பெண் மயில் கணவனைச் சற்று பிரிந்தாலும் கதறித் துடிக்கிறது. மடம் கனிந்த மாதரசி மன்னனை பிரிந்து வாழ்வது எப்படி இயலும்" என்று வெற்றிமணி அந்தப் பூவரசமரத்தடியில் புலம்பிக் கொண்டே கிடந்தான். செய்தியறிந்த குணதிலகன் அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தான். தன்னுடைய ஆருயிர் தோழன், — மனிதவர்க்கத்திற்கு இருக்க வேண்டிய பெருங்குணத்தை பெற்றுள்ள வெற்றிமணி, பிணமாகச் சாய்ந்து கிடந்தான். களத்திலே தலைகளைச்சீவி எறியும் குணதிலகன், நண்பனின் சடலத்தின் முன்னே சோர்ந்துபோனான்.

★

தளபதி மாளிகை. பிணமாக வெற்றிமணியும், மயக்கத்தில் குணதிலகனும் அடுத்தடுத்து படுக்கவைக்கப் பட்டிருந்தனர். குணதிலகனின் கட்டளைப்படி கண்ணாடிப் பெட்டியிலிருந்த ஒரு புனுகுச் சிமிழ் எடுத்துவர சேவகன் ஓடினான். ஆனால் அந்தச் சிமிழ் வந்துசேருமுன் குணதிலகனின் கண்கள் மூடிவிட்டன. பூங்குழலி இரண்டு பிணங்களுக்கு இடையே பிரக்ஞையற்றுக் கிடந்தாள். அந்தப் புனுகுச் சிமிழுக்குள், எட்டாண்டுகளுக்கு முன் இணைத்து முறுக்கிவைக்கப்பட்டிருந்த வெற்றிமணி — பூங்குழலி தலைமுடி அப்படியே இருந்தது. இதற்குமேல் என்ன நடந்தது என்று எனக்கே தெரியவில்லை சாந்தா, அந்தப் பெரியவரும் இதோடு கதையை முடித்துவிட்டார்." என்று குமார் கதையைச் சொல்லிமுடித்தான். சாந்தாவின் கண்களில் துளிர்விட்டிருந்த கண்ணீர் தரையில் விழுந்தது. ஃ

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.